# 1689 விசுவாச அறிக்கை

## 1. பரிசுத்த வேதாகமம்

1689 விசுவாச அறிக்கையின் முதல் அதிகாரம் பரிசுத்த வேதாகமத்தைப் பற்றியது. பரிசுத்த வேதாகமம் என்றால் என்ன? என்று பத்து பாராக்களில் தெளிவான விளக்கத்தை நமது பிதாக்களான சீர்திருத்தவாதப் பெரியோர்கள் அளித்துள்ளார்கள். இப்பத்துப் பாராக்களையும் அவற்றிற்கான விளக்கத்தையும் இனிப்பார்ப்போம்.

**பாரா 1:** *இரட்சிப்புக்கின்றியமையாத சகலவிதமான அறிவையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிவையும் அளிக்கக்கூடிய, தவறிழைக்காத நியதியாகவும் (கட்டளைவிதி), உறுதியானதாகவும், போதுமானதாகவும், பரிசுத்த வேதாகமம் மட்டுமே அமைந்துள்ளது. இயற்கையும், படைப்பின் கிரியைகளும் (பொது வெளிப்பாடு), மனிதன் எந்தவித சாக்குப்போக்கும் சொல்ல இடமளியாதபடி, தேவனுடைய ஞானம், வல்லமை, நற்குணம் ஆகியவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தினாலும், இரட்சிப்புக்கு இன்றியமையாத கடவுளைப்பற்றிய அறிவையும், அவரது சித்தத்தையும் வெளிப்படுத்த வல்லமையற்றவையாக உள்ளன. ஆகவே, தேவன் தமது திருச்சபைக்கு வெவ்வேறு காலங்களில் பல்வேறுவிதத்தில் தம்மையும், தமது சித்தத்தையும் வெளிப்படுத்தினார். அதுமட்டுமலலாது, சத்தியத்தின் பாதுகாப்பிற்காகவும், பரப்புதலுக்காகவும், தீய மனிதர்கள், பிசாசு, உலகம் ஆகியவற்றின் தொல்லைகளின் மூலம் திருச்சபை பாதிப்புறாதபடி நிலைநிறுத்தப்பட்டு ஆறுதல் பெறவும், தம் சித்தத்தைக்குறித்தும், தம்மைக்குறித்துமான வெளிப்பாட்டை எழுத்துவடிவில் அருளத் திருவுளங்கொண்டார்.*

*2 தீமோத். 3:15-17; ஏசாயா 8:20; லூக்கா 16:29-31; எபேசி. 2:20; ரோமர் 1:19-21; 2:14-15; சங். 19:1-3; எபிரே. 1:1; நியாயாதி. 22:19-21; ரோமர் 15:4; 2 பேதுரு 1:19-20.*

**விளக்கவுரை:**

**அ. கர்த்தரின் வெளிப்படுத்தல் - பாரா 1**

**1. பொதுவான வெளிப்படுத்தல்**

**2. சிறப்பான வெளிப்படுத்தல்**

**அ. கிரியைகளாலும், வார்த்தையாலும் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல் (இரட்சிக்கும் வல்லமையற்றது)**

**ஆ. எழுத்துருவில் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல் (மிக அவசியமானது)**

விசுவாச அறிக்கையின் முதலாவது பாரா கர்த்தரின் வெளிப்படுத்தலைப் பற்றிய கோட்பாட்டின் சுருக்கமான விளக்கத்தைத் தருகின்றது. இக்கோட்பாடு மெய்யான, ஜீவனுள்ள, ஒரே தேவன் தன்னைத்தானே எவ்வாறு வெளிப்படுத்தினார் என்ற விளக்கத்தை அளிக்கின்றது. இத்தேவனை நாம் அறிந்து கொள்ள முடியுமா? தம்மை அறியத்தர அவர் சித்தங் கொண்டுள்ளாரா? தமது திட்டங்களையும், நோக்கங்களையும் மனிதர் அறிந்து கொள்ளும்படி அவற்றை அவர் அறிவிப்பாரா? இவ்வினாக்களுக்கெல்லாம் பதிலளிக்கும் வேதம் கர்த்தர் தம்மை அறியத்தந்துள்ளார் என்று அழுத்தத்துடன் கூறுகிறது. கர்த்தர் தாமே தம்மை வெளிப்படுத்துகிறவர் என்பதோடு அவரை நாம் அறிந்து கொள்ளவும் முடியும் என்பதற்கு முழுமையான பரிசுத்த வேதாகமமே தெளிவான சாட்சியாக உள்ளது. இதனையே நாம் வெளிப்படுத்தலைப்பற்றிய கோட்பாடு என்கிறோம்.

இக்கோட்பாட்டினை பொதுவான வெளிப்படுத்தல், சிறப்பான வெளிப்படுத்தல் என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். கர்த்தர் தம்மைத் தாமே வெளிப்படுத்தும் அற்புதமான இருவழிமுறைகளாக இவை இரண்டும் இருந்தபோதும், தமது தன்மை, உள்ளடக்கம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இரண்டும் அடிப்படையில் மிகவும் வேறுபாடானவை. பொதுவான வெளிப்படுத்தலால் இரட்சிப்பிற்கு அவசியமான ஞானத்தை அளிக்க முடியாது. ஆனால், இரட்சிப்பிற்கும், விசுவாசத்திற்கும், கீழ்ப்படிவிற்கும் அவசியமான சகலதும், போதுமானதுமான ஞானத்தை சிறப்பான வெளிப்பாடே அளிக்கிறது. நமது விசுவாச அறிக்கையை வழிகாட்டியாகக் கொண்டு இவ்விரு வெளிப்பாடுகளையும் பற்றி நாம் சிறிது விபரமாகப் படிப்போம்.

பொதுவான வெளிப்பாடு கர்த்தர் இருக்கின்றார் என்பதையும், அவரைப்பற்றிய குணாதிசயங்களையும் எடுத்துக் கூறுகிறது. இப்போதனைக்கான ஆதாரத்தை நாம் சங்கீதம் 19:1-3; ரோமர் 1:19-21 ஆகிய வேதப்பகுதிகளில் பார்க்கலாம். இவ்விரு வேதப்பகுதிகளும் கர்த்தர் தம்மைக்குறித்து இவ்வுலகத்தின் மூலம் பொதுவான முறையில் வெளிப்படுத்தியுள்ளார் என்று தெரிவிக்கிறது. நமது விசுவாச அறிக்கை, இயற்கையின் மூலமும், கடவுளின் படைப்பு, பராமரிப்பு ஆகிய கிரியைகளின் மூலமும் அவரது வல்லமையையும், ஞானத்தையும் பற்றி அறிந்து கொள்ள முடிவதால் மனிதன் எந்தவித சாக்குப்போக்கும் சொல்ல முடியாது என்று அறிவிக்கிறது.

இதை நாம் இலகுவாக புரிந்துகொள்ள முடியும். ஏனெனில், இவ்வுலகும், வானமும் மனிதனின் அநேக தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. எதையும் பயிரிட்டுப்பயன்பெற நமக்கு நிலத்தின் துணையும், மழை, காற்று, ஒளி, வெப்பம் ஆகியவற்றிற்கு வானத்தின் துணையும் தேவைப்படுகின்றது. இத்தகைய நன்மைகளை அளிக்கும் வானமும் பூமியும், ஞானமும், நன்மையும் கொண்ட ஒருவர் இருப்பதை நமக்குத் தெரிவிக்கின்றன. இயற்கையின் வல்லமை அதனை உருவாக்கிய வல்லமையுள்ள ஒருவர் இருக்கிறார் என்பதை தெளிவாகத் தெரிவிக்கின்றது. மனிதனுக்கு எது தேவையோ அதை இயற்கை அளிக்கின்றது! ஆனால், மனிதன் இதைப்புரிந்து கொள்ள மறுக்கிறான். விசுவாச அறிக்கை சங்கீதம் 19 தின் இரண்டாம் பகுதி போதிக்கும் சத்தியத்தை உறுதிப்படுத்துகின்றது. அதாவது, இயற்கையின் மூலம் வெளிப்படுத்தப்படும் கடவுளைப்பற்றிய உண்மைகள் நமது அகக்கண்களைத் திறக்கவோ, நம்மைப் பாவத்தில் இருந்து விடுவிக்கவோ, நமக்கு ஞானத்தை அளிக்கவோ வல்லமையற்றவை (19:7-13) என்பதே அவ்வுண்மையாகும்.

விசுவாச அறிக்கையின் இம்முதல் பாரா, எபிரேயர் 1:1 இன் அடிப்படையில், பொதுவான வெளிப்படுத்தலால் இயலாததை எவ்வாறு சிறப்பான வெளிப்படுத்தல் நிறைவேற்றுகின்றது என்பதை விளக்குகின்றது. கடவுள் தம்மை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை எடுத்துக்காட்டும் எபிரேயர் 1:1 மிக முக்கியமான வேதப் பகுதியாகும். பழைய உடன்படிக்கையின் (பழைய ஏற்பாடு) மூலம் கடவுள் தம்மை எவ்வாறு பங்கு பங்காக வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இவ்வேதப்பகுதி விளக்குகிறது. கடவுள் நமது முன்னோர்களுக்கு தம்மை கனவுகள் மூலமும், தரிசனங்கள் மூலமும், தேவ தூதர்கள் மூலமும், மேலும் பலவழிகளிலும் வெளிப்படுத்தியுள்ளார். இவற்றில் எதுவுமே ஆரம்பத்தில் எழுத்து வடிவில் கொடுக்கப்படவில்லை. ஏபிரேயர் 1:1 குறிப்பாக இயேசு கிறிஸ்துவைப்பற்றிப் பேசுகிறது. அதாவது, ஆரம்பத்தில் கடவுள் தம்மை வெளிப்படுத்திய விதங்களுக்கு மாறாக இறுதியில் தனது ஒரே குமாரனின் மூலமாகப் பேசினார். இதனை நாம் “கிரியைகளினாலும், பேச்சின் மூலமாகவும் கொடுக்கப்பட்ட வெளிப்பாடு” என்று கூறுகிறோம். அதாவது, கடவுள் கிரியைகள் செய்ததோடு அவற்றின் பொருளை நாம் புரிந்து கொள்ளும்படியாகத் தெளிவாகப் பேசி விளக்கியுள்ளார்.

இத்தகைய வெளிப்படுத்தலை, அதை நேரடியாகக் கேட்டவர்களாலும், இதைக்குறித்து பிறர் மூலம் தெரிந்து கொண்டவர்களாலுமே அறிய முடிந்தது. எழுத்தில் இருந்தால் மட்டுமே இதை இனி வரப்போகும் சந்ததியினரால் அறிந்து கொள்ள முடியும். ஆனால், வேதமோ எழுத்தில் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தலாகும். கிரியைகளாலும், பேச்சின் மூலமும் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல் இப்போது எழுத்தில் தரப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

கடவுள் ஏன் இரட்சிப்பிற்கு தனது கிரியைகளையும், பேச்சினால் அளிக்கப்பட்ட வெளிப்படுத்தலையும் எழுத்தில் வடித்துத்தர நோக்கங் கொண்டார் என்பதற்கான காரணங்களை விசுவாச அறிக்கை விளக்குகின்றது. இதற்கான மூன்று காரணங்களைப் பார்ப்போம்.

1. தனது சித்தத்தை திருச்சபைக்கு அறிவிக்கு முகமாக கடவுள் அதனை எழுத்தில் வடிக்க நோக்கங் கொண்டார். எழுத்தில் வடிக்கப்படாவிட்டால் திருச்சபை அதனை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

2. சத்தியத்தைத் தொடர்ந்து பரப்பவும், பராமரிக்கவும் ஏதுவாக கடவுள் அதனை எழுத்தில் வடித்தார். இல்லா விட்டால் திருச்சபை அதனை எவ்வாறு ஏனையோருக்கு அறிவிக்க முடியும்?

3. பிசாசின் தந்திரங்களில் இருந்தும், உலகத்தினதும், நமதும் மாம்சபிரகாரமான நடவடிக்கைகளில் இருந்தும் திருச்சபையைப் பாதுகாத்துக் கட்டி எழுப்புமுகமாக வெளிப்படுத்தலை எழுத்தில் தந்தார். வேதமில்லாமல் விசுவாசிகள் தங்களுடைய ஆன்மீகப் போராட்டத்தில் வெற்றி பெறமுடியாது.

பொதுவான வெளிப்படுத்தலின் மூலம் இரட்சிப்பை அடைய முடியாததாலும், கிரியைகளினாலும், பேச்சின் மூலமும் கடவுள் தந்துள்ள வெளிப்படுத்தல் இரட்சிப்பிற்கு அத்தியாவசியமானதாலும் நமக்கு எழுத்தில் வடிக்கப்பட்ட வேதம் நிச்சயம் தேவைப்படுகிறது. கடந்த காலங்களில் கர்த்தர் தம்மை வெளிப்படுத்திய விதங்களின் மூலம் தொடர்ந்து தம்மை வெளிப்படுத்துவதை நிறுத்திக் கொண்டதால் (எபிரேயர்1:1), இன்று வேதம் அத்தியாவசியமானது. வேதமில்லாமல் ஒரு மனிதன் இரட்சிப்பை அடைய முடியாது. வேதமில்லாமல் ஒரு கிறிஸ்தவன் தனது கிறிஸ்தவ வாழ்வில் வளர்சிபெற முடியாது. அத்தோடு, திருச்சபையும் வெற்றிகரமாக முன்னேற முடியாது.

இவ்வத்தியாயத்தின் முதலாவது பாராவின் முதல் வசனம், இப்பாராவின் போதனைகளின் சாராம்சமாக அமைந்துள்ளது. “இரட்சிப்புக்கின்றியமையாத சகலவிதமான அறிவையும், விசுவாசத்தையும், கீழ்ப்படிவையும்

அளிக்கக்கூடிய தவறிழைக்காத நியதியாகவும், உறுதியானதும், போதுமானதாகவும் பரிசுத்த வேதாகமம் மட்டுமே அமைந்துள்ளது.” இதனை மேலும் விளக்கமாகக் கூறுவதானால், வேதம் இரட்சிப்பிற்கு அவசியமான அறிவை எந்தவித சந்தேகமுமின்றி, எந்தவிதக்குறைபாடுமின்றி, உறுதியாகவும், போதுமானவிதத்திலும் தருகின்றது. கடவுள் மனிதனுக்கு தன்னைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். அவர் எதையும் விட்டுவைக்கவில்லை. ஆகவே, நமக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் வேதத்தை நமது வாழ்க்கையில் உறுதியாகப்பின்பற்றி நடப்பதே நமது கடமையாக இருக்கின்றது (எபேசி. 5:15).

இம்முதலாவது பாராவின் போதனைக்கு அடிப்படையாக விசுவாச அறிக்கை கீழ்வரும் வேதப்பகுதிகளை சுட்டிக்காட்டுகின்றது.

ப.ஏ - சங்கீதம் 19; ஏசாயா 8:20; நீதி. 22:19-21
பு.ஏ - ரோமர் 1:19-21; எபிரே. 1:1; 2 தீமோத். 3:15-17;
2 பேதுரு 1:19-21; எபேசி. 2:20;
ரோமர் 15:4; 2:14, 15; லூக்கா 16:29.

வேதத்தைப்பற்றிய கோட்பாடுகளைப் போதிக்கும் அடிப்படை வேதப்பகுதிகளாக 2 தீமோ. 3, 2 பேதுரு 1 ஆகிய பகுதிகள் அமைகின்றன. இவற்றை நாம் கவனமாகப் படித்தல் அவசியம். 2 தீமோ. 3:16, “தேவவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றது” (God breathed) என்று போதிக்கின்றது. வேதத்தைக் கர்த்தர் எவ்வாறு தந்தருளினார் என்பதை இப்பகுதி தெரிவிக்கின்றது. இதை நாம் சரிவரப்புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, கர்த்தர் பேசி வேதத்தைத் தந்தருளினார் என்பதே இதற்குப் பொருள். இதைக்குறித்து மேலும் விளக்கமாக 2 பேதுரு 1:21, கர்த்தர் எவ்வாறு பேசி, மனிதரைப்பயன்படுத்தி வேதத்தை எழுத்தில் தந்தார் என்று தெரிவிக்கின்றது. இப்பகுதி, “தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்” என்று கூறுகின்றது. அதாவது இம்மனிதர்கள் தேவனாலே வழிநடத்தப்பட்டு, அவர் எதைப்பேசும்படியும், எழுதும்படியும் விரும்பினாரோ அவற்றை மட்டுமே எழுதினார்கள். இவற்றை அவர்கள் பேசி, எழுதியபோது தங்களுடைய தனித்துவம், பேச்சுவன்மை, எழுத்து நடை ஆகியவற்றை இழந்து விடவில்லை. பரிசுத்த ஆவியின் மூலமாக இவர்களைக் கொண்டு நடத்திய தேவன் தனது வார்த்தைகளை இம்மனிதர்களைப்பயன்படுத்தி எழுத்தில் தந்தருளினார். இதனை வேதம் உறுதியாகத் தெரிவிப்பதால் வேதத்தில் எந்தவிதமான தவறோ, தனிமனிதனின் பாவகரமான சொந்த எண்ணங்களோ காணப்படவில்லை. சில லிபரல் சிந்தனையாளர்கள் நினைப்பதுபோல் வேதத்தில் மனிதனின் சிந்தனையும், தேவனின் சித்தமும் கலந்து காணப்படவில்லை. முழு வேதமும் தேவனுடைய சித்தத்தை மட்டுமே அறிவிக்கின்றது. ஆகவே, முழு வேதமும் கர்த்தருடைய பரிபூரணமான, அதிகாரமுள்ள, அழியாத வார்த்தைகள்.

இதை வாசிக்கும் நண்பர்களே! கர்த்தர் தன்னை வெளிப்படுத்த செய்துள்ள அற்புதங்களை எண்ணிப் பாருங்கள். அவரை அறிந்து கொள்ள நீங்கள் உங்களுடைய ஆவியையும், இருதயத்தையும், சிந்தனையையும் முழுதாகப் பயன்படுத்துவீர்களா? இரட்சிப்பிற்குரிய அனைத்து அறிவையும் அளிக்க வேதம் மட்டுமே போதுமானதும், அழியாததும், தவறிழைக்காததுமான சத்திய வார்த்தைகளாக இருப்பதால், அவ்வேதத்தை ஊன்றிப்படிக்க உங்கள் வாழ்நாளை முழுமையாக கர்த்தருக்கு ஒப்படைப்பீர்களா? பேதுரு, 2 பேதுரு 1:17-19 இல் கூறுவதுபோல் எழுத்தில் தரப்பட்டுள்ள வெளிப்படுத்தலே பேசப்படும் வார்த்தையைவிட மேலான வார்த்தை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். எழுத்தில் தரப்பட்டுள்ள வெளிப்படுத்தலே அழியாததும், உறுதியானதுமாகும். இன்று அநேகர் புத்தியற்று எழுத்தில் தரப்பட்டுள்ள வெளிப்படுத்தலைப் படித்து கர்த்தரை அறிந்து கொள்ள முயலாமல், அவர் தம்மோடு பேச வேண்டும் என்று அலைகிறார்கள். இவர்களைப்போல் நீங்களும் வேதத்தை விட வேறெதையும் நாடி நிற்கிறீர்களா? சங்கீதக்காரன் வேதத்தைக் குறித்து சொல்வதை எண்ணிப் பாருங்கள்: “அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும், தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கின்றது.”

**பாரா 2:** *பரிசுத்த வேதாகமம் அல்லது எழுத்து வடிவில் அமைந்த தேவனுடைய வார்த்தை, கீழ்வரும் பழைய, புதிய ஏற்பாடுகளை மட்டுமே கொண்டது.*

*பழைய ஏற்பாடு:*

*ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 இராஜாக்கள், 2 இராஜாக்கள், 1 நாளாகமம், 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர், யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு, ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியல், தானியல், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.*

*புதிய ஏற்பாடு:*

*மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர், ரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர்,*

*எபேசியர், பிலிப்பியர், கொலேசியர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர், 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், எபிரேயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா, யோவானுக்கு வெளிப்படுத்தின் சுவிஷேசம்.*

*மேல்வரும் புத்தகங்கள் அனைத்தும் தேவனுடைய ஏவுதலினால், எமது விசுவாசத்திற்கும் வாழ்க்கைக்கும் நியதிப்பிரமாணமாக இருக்கும்படியாக அளிக்கப்பட்டுள்ளன.*

**பாரா 3:** *தள்ளுபடிப் புத்தகங்கள் (Apocrypha) என அழைக்கப்படுபவை தெய்வீக ஏவுதலால் அருளப்படாதவையால் திருமறையில் அவற்றிற்கு இடமில்லை. ஆகையால், அவை ஏனைய சாதாரண புத்தகங்களைப்போல் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர திருச்சபையில் அவற்றிற்கு எந்தவிதமான அதிகாரமுமில்லை.*

*லூக்கா 24:27; ரோமர் 3:2.*

**விளக்கவுரை:**

**ஆ. வேதத்தின் ஒழுங்கமைப்பு - பாரா 2 & 3**

**1. ஒழுங்குபடுத்தப்பட்ட புத்தகங்கள்**
**பழைய ஏற்பாடு - 39 நூல்கள்**
**புதிய ஏற்பாடு - 27 நூல்கள்**

**2. தள்ளுபடிப் புத்தகங்கள்**

**3. வேத நூல்களின் ஒழுங்கமைப்பின் நிரூபணம் (வேதம் தேவனால் அருளப்பட்டது)**

**4. வேத நூல்களின் ஒழுங்கமைப்பு தரும் போதனை**
**(வேதமே நமது விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்குமான கர்த்தரின் கட்டளை நியதி)**

இப்பகுதி, எவ்வாறு? எத்தனை? நூல்களைக் கர்த்தர் தன்னால் தெரிவு செய்யப்பட்ட மனிதர்கள் மூலமாக, வேதமாக ஒருங்கினைத்துத் தந்துள்ளார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது. உண்மையானதை நாம் தெரிந்தெடுத்து, தவறானவற்றை விலக்கி வைக்க வேண்டும். வெளிப்படுத்தலாகிய கோட்பாடு, மனிதர் கீழ்ப்படிந்து நடக்குமாறு கர்த்தர் எவ்வாறு தனது சித்தத்தை அறியத்தந்தார் என்று விளக்குவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதால், கர்த்தர் தனது சித்தத்தை எந்நூல்களின் மூலமாகத் தெரியப்படுத்தினார்? என்ற வினாவிற்கு நாம் பதிலளிக்க வேண்டும்.

இப்பாராக்கள், ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. ரோமன் கத்தோலிக்க திருச்சபை, வேதத்திற்கு முரணாக தள்ளுபடிப் புத்தகங்களை வேதத்தோடு இணைத்து, அவற்றை வேதத்தின் ஒரு பகுதியாகக் கருதுகின்றன. ஆனால், தள்ளுபடி நூல்கள் வேதத்தின் ஒரு பகுதியல்ல என்பதையும், அவை கர்த்தரால் அருளப்பட்டவையல்ல, என்பதையும் (2 தீமோ. 3:16) மிகத்தெளிவாக எம்மால் சுட்டிக்காட்ட முடியும். தள்ளுபடி நூல்களால் மனிதர்களுக்கு இரட்சிப்பையோ, விசுவாசத்தையோ அளிக்க முடியாது. அவை முற்றாக நிராகரிக்கப்பட வேண்டியவை.

யூதர்கள் தள்ளுபடி நூல்களை எப்போதும் வேதத்துடன் சேர்க்கப்படக் கூடாதென்று நிராகரித்துள்ளனர். சப்டுவாஜின்ட் என்று அழைக்கப்படும் கிரேக்க மொழி பெயர்ப்பில் அமைந்த பழைய ஏற்பாடு இவற்றை உள்ளடக்கி இருந்தது. கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழியில் வேதம் மொழிபெயர்க்கப்பட்டபோதே இத்தள்ளுபடிப் புத்தகங்கள் ஜெரோமின் இலத்தீன் வல்கேட் மொழிபெயர்ப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறே ரோமன் கத்தோலிக்கர் இவற்றை வேதத்துடன் சேர்த்துக்கொண்டனர். 397 இல் கூடிய காத்தேஜ் கவுன்ஸில், இத்தள்ளுபடிப் புத்தகங்கள் பொது ஆராதனைகளில் வாசிக்கத் தகுதியுள்ளவை என்று தீர்மானம் நிறைவேற்றியது. 1548 இல் கூடிய டிரென்ட் கவுன்ஸில் இத்தள்ளுபடிப் புத்தகங்கள் வேதத்துடன் இணைக்கப்படத் தகுதியற்றவை என்று தீர்மானித்தது. பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் அனைவரும் தள்ளுபடிப்புத்தகங்கள் வேதத்திற்கு எதிரானவை என்றும், அவற்றை வேதத்தோடு சேர்க்கக்கூடாது என்றும் கருதினர். எமது 1689 விசுவாச அறிக்கையும், ஆதி யூதர்களுடனும், கிறிஸ்தவ ஆதிசபையுடனும், சீர்திருத்தவாதிகளுடனும் இணைந்து இத்தள்ளுபடிப் புத்தகங்களை முற்றாக நிராகரிக்கின்றது.

**பாடம்:** மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இவ்விரு பாராக்களும் கிறிஸ்தவர்களுடைய அன்றாட வாழ்க்கை அனுபவத்திற்கு எந்த சம்பந்தமுமில்லாதவை போலத் தென்படலாம். ஆனால், இவை கர்த்தர் எத்தனை அற்புதமாகத்

தனது பராமரிப்பின் கிரியைகளால் வேதத்தைப் பாதுகாத்துத் தந்துள்ளார் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இப்பராமரிப்பை நாம் பாரா 8 இல் மேலும் விளக்கமாகப் பார்க்கலாம்.

கர்த்தர் அனைத்தையும் நன்மையாகவே செய்துள்ளார். அவர் எல்லாவற்றையும் படைத்தபிறகு அவற்றைப்பார்த்து மிகவும் நல்லது என்றே கூறியுள்ளார். அதாவது எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது இதற்குப் பொருள். கிறிஸ்துவின் பரிகாரப்பலியான சிலுவை மரணமும் முடிந்ததாக, அதாவது முழுமையாக நிறை வேற்றப்பட்டதாக வாசிக்கிறோம். இதேவகையில், வேதமும் முழுமையாக நிறைவேற்றப்பட்ட நூலாகும். வேதத்தின் 66 நூல்களும் ஒரு நூலகமாகும். இவை நம்மைப் பரலோகத்திற்கு வழிகாட்டும் நூல்களாகும். இவ்வறுபத்தி ஆறு நூல்களில் ஒவ்வொன்றையும் நாம் அன்றாடம் வாசிக்க வேண்டும். வேதத்தை அன்றாடம் வாசிக்கும்படியாக, தகுந்த ஒரு முறையைப் பின்பற்றி ஒவ்வொரு நூலில் காணப்படும் போதனையையும் புரிந்து கொள்வது நமது ஆன்மீக வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதாகும்.

**பாரா 4:** *பரிசுத்த வேதாகமத்தின் அதிகாரம் எந்த ஒரு மனிதனிலோ அல்லது சபையின் சாட்சியிலோ தங்கியிராமல் அதன் ஆக்கியோனாகிய உண்மையுள்ள கடவுளை முழுமையாக சார்ந்துள்ளது. அது கடவுளின் திருவார்த்தையாக இருப்பதால் அதற்கு நாம் அடிபணிதல் வேண்டும்.*

*1 தெசலோ. 2:13; 2 தீமோ. 3:16; 2 பேதுரு 1:19-21; 1 யோவான் 5:9.*

**பாரா 5:** *திருச்சபையினுடைய சாட்சியினால் உந்தப்பட்டு நாம் பரிசுத்த வேதாகமத்தைப்பற்றிய ஓர் உயர்வான மரியாதைக்குரிய எண்ணத்தைக் கொண்டிருக்கலாம். அதன் உள்ளடக்கங்களின் தெய்வீகத்தன்மை, அதன் போதனைகளின் நற்பயன், அதன் மாண்புமிக்க தன்னியல்பு, ஆரம்பம் முதல் இறுதிவரை எல்லாப் பகுதிகளும் என்றேன்றொன்று ஒத்துப் போகும் தன்மை, எல்லா வகையிலும், எல்லா மகிமையையும், தேவனுக்கே கொடுக்கும் அதன் மாட்சி, இரட்சிப்புக்குரிய ஒரே வழிமுறையைக்குறித்த அதன் முழுமையான வெளிப்படுத்தல், அத்தோடு, அதனுடைய இன்னும் அநேக உயர்ந்த தன்மைகளும், முழுமையான பூரணத்துவமும், அது தேவனுடைய திருமறைதான் என்று நிரூபிக்கும் அளவற்ற சாட்சியங்களை நமக்கு அள்ளித் தருகின்றது. ஆயினும், தவறிழைக்கவியலாத (Infallible) திருமறையின் இத்தெய்வீக அதிகாரத்தைக் குறித்த முழு நம்பிக்கையையும் விசுவாசத்தையும், பரிசுத்த ஆவியானவர் திருமறையின் மூலம் நமது இருதயத்தில் ஏற்படுத்தும் சான்றினாலும், நம்மில் நடப்பிக்கின்ற செயலின் மூலமும் மட்டுமே அனுபவிக்க முடியும்.*

*யோவான் 16:13-14; 1 கொரி. 2:10-12; யோவான் 2:20, 27.*

**விளக்கவுரை:**

**இ. வேதத்தின் அதிகாரமும், ஆவியின் சாட்சியும் (4, 5).**

**1. வேதத்தில் நமது நம்பிக்கை**

**அ. வேதம் எந்த ஒரு மனிதனின் சாட்சியிலோ அல்லது சபையின் சாட்சியிலோ தங்கியிருக்கவில்லை.**

**ஆ. அது கர்த்தரின் அதிகாரத்தில் மட்டுமே தங்கியுள்ளது - ஏனெனில் அது கர்த்தரின் வார்த்தை.**

**2. வேதம் கர்த்தரின் வார்த்தை என்பதற்கான சாட்சியங்கள்.**

**அ. திருச்சபை, வேதம் கர்த்தரின் வார்த்தை என்று சாட்சி பகர்கின்றது.**

**ஆ. திருச்சபை, நாம் வேதத்திற்கு உயர்ந்த இடத்தை அளிக்க நம்மை ஊக்குவிக்கிறது,**

**3. ஆவியின் சாட்சியால் விசுவாசி வேதத்தில் அதிக நம்பிக்கையும், நிச்சயத்துவத்தையும் அடைதல்.**

இரண்டு காரணங்களுக்காக இப்பாராக்கள் மிக முக்கியமானவை. முதலாவதாக, வரலாற்றுக் காரணங்களுக்காக இவை முக்கியமானவை. ரோமன் கத்தோலிக்க மதம், வேதத்தின் அதிகாரத்தில் நமக்கிருக்க வேண்டிய உறுதி கத்தோலிக்க திருச்சபை அளிக்கும் சாட்சியத்திலேயே தங்கியிருப்பதாகப் போதிக்கிறது. அதாவது, வேதத்தைக் கர்த்தருடைய வார்த்தை என்று நம்புகிறவர்கள் அப்படி செய்வதற்குக் காரணம், அவர்கள் ரோமன் கத்தோலிக்க

சபையை நம்புவதால்தான், என்பது அவர்களுடைய போதனை.

இரண்டாவதாக, ஏன் வேதமே இறுதியானதும், முடிவானதுமான அதிகாரத்தை நம் வாழ்க்கையில் கொண்டிருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்வதற்காக இப்பாராக்கள் முக்கியமானவை. இப்பாராக்கள் நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சபை வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் எந்த அடிப்படையில் வேதத்திற்கு அதிகாரம் இருக்கின்றது என்பதை எடுத்து விளக்குகின்றன.

மேலே தரப்பட்டுள்ள, சுருக்கக்குறிப்பை மீண்டும் பார்ப்பீர்களானால், அங்கே, விசுவாசமும், வேதத்திற்கு அடிபணிதலும் நமது கடமையாக எதிர்பார்க்கப்படுவதைப் பார்க்கலாம். வேதம் கர்த்தரின் வார்த்தையாக இருப்பதாலேயே அதை நாம் நம்புகிறோம். அதேவேளை, அவ்வேதமே தான் கர்த்தரின் தவறிழைக்கவியலாத வார்த்தை என்பதற்கான சாட்சியங்களையும் தருவதால் அதை நாம் நம்புகிறோம். இங்கே, விசுவாசத்திற்கும், சாட்சிகளுக்கும் எந்தவிதமான முரண்பாடும் இருக்கிறதா என்று பாருங்கள்? ஆனால், அப்படியொரு முரண்பாடிருப்பதுபோல் சிலர் காட்ட முயல்வர். விசுவாச அறிக்கையோ விசுவாசத்திற்கும், சாட்சிகளுக்கும் இடையில் இருக்கும் சமநிலையை அழகாக விளக்குகிறது.

நாம், வேதம் தேவனின் சித்தத்தை வெளிப்படுத்தும் அவரது வார்த்தை என்று நம்புகிறோம். ஆனால் இதை நாம் எப்படி நம்ப முனைந்தோம்? உண்மையில், எல்லோருமே வேதத்தை நம்பி அதன் போதனைகளைக் கேட்டு நடுங்குவதில்லை (ஏசாயா 66:2). விசுவாச அறிக்கை 2 தெசலோனிக்கேயர் 2:13 ஐச்சுட்டிக் காட்டுகின்றது. நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதனாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்தரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். தேவன் எம்மைத் தெரிந்து கொண்டிருப்பதனாலும், அவரையும் அவரது வார்த்தையையும் விசுவாசிக்கும்படியாக நமக்கு விசுவாசத்தைத் தந்திருப்பதனாலும் வேதத்தை நாம் நம்புகிறோம். தேவனால் தெரிந்து கொள்ளப்படாமல் எவரும் அவரையோ, அவரது வார்த்தையையோ நம்ப முடியாது.

வேதம் வெறும் கட்டுக்கதை என்றும், மனிதனுடைய எண்ணங்களின் தொகுப்பு என்றும் கூறி அதை மனிதர்கள் நம்ப மறுப்பதால் அதன் அதிகாரம் எந்தவிதத்திலும் குறைந்துவிடப்போவதில்லை. ஒருவருமே அதை நம்பாவிட்டாலும் அது தொடர்ந்து தேவனின் அதிகாரமுள்ள வார்த்தையாகவே இருக்கிறது. ஆனால், தேவனால் தெரிவு செய்யப்பட்டு வேதத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைக் கொண்டிருப்பதனாலேயே பலர் அதனை நம்பி ஏற்றுக் கொள்ளுகின்றனர் (1 கொரி. 2:10-12). யோவான் 6:29 இல் இயேசு, “அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது” என்று கூறுகிறார். சத்தியமே உருவாயுள்ள தேவனிலேயே வேதத்தின் அதிகாரமும், இயேசுவின் வார்த்தைகளின் அதிகாரமும் தங்கியுள்ளது. வேதம் தேவனின் வார்த்தையாக இருப்பதாலேயே அதை நாம் விசுவாசிக்க வேண்டும் என்று விசுவாச அறிக்கையின் நான்காம் பாரா கூறுகிறது. சில வேளைகளில் நாம் வேதத்தை நம்பாமல் போகக்கூடும். வேதப்பிரசங்கங்களைக் கேட்கும்போதும், வேதத்தை வாசித்து அதன் போதனைகளைத் தெரிந்து கொள்ளும்போதும் அவற்றை நம் மனம் ஏற்றுக்கொள்ளத் தயங்கக்கூடும். ஆனால், அச்சூழ்நிலைகளிலும் நாம் வேதத்தை நம்ப வேண்டும். பவுல் 1 தெசலோ. 2:13 இல் தெசலோனிக்கேயரைப் பற்றி, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டீர்கள் என்று கூறியிருப்பதுபோல், நாமும் இருக்க வேண்டும்.

ஆனால், விசுவாச அறிக்கையின் ஐந்தாம் பாரா, நாம் வேதத்தை தேவவசனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் கட்டளையிடுகிறது என்று மட்டும் கூறி நிறுத்திவிடாமல், நாம் விசுவாசித்துக் கீழ்ப்படியும்படியாக வேதம் அதற்கான சான்றுகளையும் தருகிறது என்று கூறுகின்றது. வேதத்திற்கு நாம் நமது வாழ்வில் மிக உயர்ந்த இடத்தை அளிக்கும்படி திருச்சபை அச்சான்றுகளுக்கான சாட்சி பகருகின்றது. வேதத்திற்கு நாம் மிகுந்த மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள, பல காரணங்களை இப்பாராவில் நாம் வாசிக்கிறோம். அவை ஒவ்வொன்றையும் இப்போது சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.

**அ. அதன் உள்ளடக்கங்களின் தெய்வீகத்தன்மை**

யோவான் 3:12 இல் இயேசு நிக்கொதேமுவைப்பார்த்து, “பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?” என்று கேட்டார். பரம காரியங்களைப் பற்றியே முழு வேதமும் பேசுகிறது. பரலோகத்தை நெருங்கவும், இறுதியில் அதை அடையவும் நாம் விரும்பினால், வேதம் போதிக்குபடி நாம் வாழ்ந்து, பரலோகத்தைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு வாழ்வது பரலோகம் இவ்வுலகிற்கு வந்தது போலாகும். வேதத்தை நான் மேலும் மேலும் படிக்கும்போது, சாதாரண மனிதன் அதை எழுதி, அதன் புத்தகங்களைத் தொகுத்திருக்க முடியாது என்பதில் எனக்கு அதிக நிச்சயம் ஏற்படுகிறது.

### ஆ. அதன் போதனைகளின் நற்பயன்

இதன் மூலம் விசுவாச அறிக்கை வேதத்தின் நோக்கத்தையும், அதன் வல்லமையையும் சுட்டிக் காட்டுகின்றது. "விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பலனாயிருக்கிறது" (ரோமர் 1:16). "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபிரேயர் 4:12). மெய்யான விசுவாசியால் மட்டுமே சங்கீதம் 34:8 கூறும், "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்ற சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடியும். எபிரேயர் 11:6, "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" என்று கூறுகின்றது. வேதமே நமக்கு வல்லமையளிப்பதாகவும், துணை புரிவதாகவும் உள்ளது. அதன் மூலமே நாம் இயேசுவுக்குள்ளாக கர்த்தரை அணுக முடிகின்றது. எத்தனை அருமையான சத்தியம்! வேதம் ஜீவனுள்ளதாயும், நமக்கு ஜீவனளிக்கிறதாயும் உள்ளது.

### இ. அதன் சிறப்பான தன்னியல்பு

வேதம், படித்தவர்களும், படிக்காதவர்களும் வாசித்துப் புரிந்து கொள்ளும்படி எல்லோருக்குமாக எழுதப் பட்டிருக்கிறது (பாரா 7). அதன் சில பகுதிகள் சிறப்பான இயல்பைக் கொண்டுள்ளன. உதாரணமாக, ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் படைப்பைப்பற்றிய விளக்கத்தைக் கூறலாம். யோவான் 1 இல் கொடுக்கப்பட்டுள்ள கிறிஸ்துவைப் பற்றிய போதனை; உபாகமம் 1-11 வரையுள்ள அதிகாரங்களில் காணப்படும் மோசேயின் பிரசங்கம்; சங்கீதத்தின் 1, 8, 19, 23, 32, 51, 90, 103 ஆகிய அழகான பகுதிகள்; யோபுவின் துன்பங்கள்; ஏசாயாவினதும், இயேசுவினதும் பெரும் பிரசங்கங்கள், ரோமர், காலத்தியர், எபேசியர் ஆகிய நூல்களில் காணப்படும் பவுலின் இறையியல் போதனைகள் ஆகியவற்றையும் எடுத்துக்காட்டாக கூறலாம். கர்த்தரின் வேதம் சிறப்பானது, அதன் மலை உயரப்போதனைகள் நம்மை பிரமிக்கவைப்பவை.

### ஈ. அதன் எல்லாப்பகுதிகளும் ஒன்றோடொன்று ஒத்துப் போகும் தன்மை

வேதத்தின் தெய்வீகத்தன்மை பற்றிய அநேக சான்றுகளில் இது மிக முக்கியமானது. படைப்பில் ஆரம்பித்து, அப்போஸ்தலர்களின் ஊழியத்தால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபை வரலாறு வரையுமுள்ள, மீட்பின் வரலாற்றை விபரிக்கும் நூலாக வேதம் காணப்படுகின்றது. வேதத்தை எழுதியவர்களையும், அவர்களது தனித்தன்மையையும், வேதத்தின் வகைவகையான இலக்கிய அம்சங்களையும், அதன் கால அளவு ஆகிய அனைத்தையும் பார்க்கும்போது, அது தெய்வீக வழிநடத்தலாலேயே ஒருங்கிணைக்கப்பட்டு, அதன் அனைத்து நூல்களும், எழுதியவர்களும் ஒத்துப்போகும் ஒற்றுமையைத் தனக்குள் கொண்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

### உ. எல்லா வகையிலும், எல்லா மகிமையையும் தேவனுக்கே கொடுக்கும் அதன் மாட்சி

வேதத்தைப் படிக்கும்போது அதை நாம் பகுதி பகுதியாக படிப்பது வழக்கம். சில வேளைகளில் தள்ளி நின்று அது முழுவதையும் நாம் மொத்தமாகவும் பார்க்கிறோம். இவ்வாறு பார்க்கும்போது கர்த்தர் தனது மகிமைக் காகவே வேதத்தை நமக்குத் தந்திருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளாமலிருக்க முடியாது. நாம் ஓர் வரையறைக்குள் கட்டுப்படுத்தப்பட்டவர்களாகவும், தேவன் எல்லையற்றவராகவும் இருப்பதால் அவரையே எல்லா மகிமையும் சேர வேண்டும். அவர் நீதியுள்ளவராக இருக்கிறார். நாம் நீதிமான்களாக வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் ஞானியாகவும், வல்லவராகவும் இருக்கிறார். நாம் புத்தியற்றவர்களாகவும், வல்லமை யற்றவர்களாகவும் உள்ளோம். அவர் கிருபையுள்ளவராகவும், கருணையுள்ளவராகவும் இருக்கிறார். நாமோ கேடானவர்களாகவும், இரட்சிக்கப்பட வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

### ஊ. இரட்சிப்புக்குரிய ஒரே வழிமுறையைக் குறித்த அதன் முழுமையான வெளிப்படுத்தல்

வேதம் இரட்சிப்புக்குரிய வழியை மெய்யாகவே மனிதனுக்கு வெளிப்படுத்துகிறது. அது நமது கால்களுக்கு தீபமாகவும், நம் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கிறது. அது நமக்குப் பாதையைக் காட்டித் தருவதோடு மட்டும் நின்றுவிடாமல் அப்பாதையில் நம்மை வழிநடத்துகிறது. பல்லாயிரக்கணக்கானவர்களை வழிநடத்தி, அவர்களுக்கு இரட்சிப்பை அளித்து தேவ கோபத்திலிருந்து விடுவித்திருக்கும் வேதத்தை நம்பினால் அது நம்மையும் வழிநடத்தும்.

### எ. அதன் இன்னும் அநேக உயர்ந்த தன்மைகளும், முழுமையான பூரணத்துவமும்

விசுவாச அறிக்கையின் ஆசிரியர்கள், வேதம், எல்லையற்ற நல்ல போதனைகளைக்கொண்ட ஒரு சுரங்கம் என்றும், அது விசுவாசியை அவனது விசுவாசத்தில் ஊக்கப்படுத்துவதற்கான அநேக விதவிதமான சான்று

களையும் தனக்குள் கொண்டுள்ளதென்றும் நம்பினார்கள். இதையே அவர்கள் அதன் “உயர்ந்த தன்மைகளும், பூரணத்துவமும்” என்ற பதத்தின் மூலம் விளக்க முனைகிறார்கள். தேவன் தமது வார்த்தையின் மூலம் நமக்கு அருமையான சத்தியங்களைப் போதிப்பார் என்ற எதிர்பார்ப்புடன் நாம் வேதத்தை வாசித்து, படித்து, மனப்பாடம் செய்வதுடன், வேதப்பிரசங்களைக் கேட்கவும் வேண்டும் (சங்கீதம் 119:18).

இறுதியாக, வேதத்தின் அதிகாரத்தைக்குறித்த இப்பகுதியில் நாம் பரிசுத்த ஆவியைக் குறித்த ஓர் உண்மையைப் பார்க்க வேண்டும். இதுவரை நாம் பார்த்த வேதத்தின் அதிகாரத்தைக் குறித்த சான்றுகள் விசுவாசியை நம்பவைக்கும் அளவுக்கு எத்தனை வலிமையுள்ளதாக இருந்தபோதும், விசுவாச அறிக்கை கூறுவதுபோல், பரிசுத்த ஆவியானவர் திருமறை மூலம் நமது இருதயத்தில் தரும் சான்றினாலும், நம்மை நடப்பிக்கின்ற செயலின் மூலமும் மட்டுமே அவற்றை அனுபவிக்க முடியும்.

5 ஆம் பாராவில் தரப்பட்டுள்ள ஆவியானவரின் செயலைப்பற்றிய விளக்கத்தை நாம் மீண்டும் ஒரு முறை பார்ப்போம். “பரிசுத்த ஆவியானவர் திருமறையின் மூலம் நமது இருதயத்தில் தரும் சான்றினாலும், நம்மில் நடப்பிக்கின்ற செயலினாலும்” என்று கூறப்பட்டிருக்கிறது. ஆவியானவரின் இச்சாட்சி உள்ளார்ந்ததும், தனிப்பட்டதுமானதாகும். இது ஒரு விசுவாசியின் இருதயத்தில் நிகழும் செயலாகும். இது ஆவியானவரின் செயலாகும். ஆனால், இதனை நாம் நமது சுய அனுபவமாகவோ அல்லது நமது சிந்தனையின் வெளிப்பாடா கவோ கருதிவிடக்கூடாது. இது வேதத்தில் இருந்து வருவதாகவும், அதனால் வெளிப்படுத்தப்படுவதாகவும் உள்ளது. வேதத்தை நாம் வாசித்து, படித்து, மனப்பாடம் செய்யும்போதே ஆவியானவர் வேதத்தின் மூலமாக நமது இருதயத்தில் சான்று பகர்கிறார். விசுவாச அறிக்கை பின்வரும் வசனங்களை இதற்கு எடுத்துக்காட்டாக சுட்டிக் காட்டுகின்றது. யோவான் 16:13, 14; 1 கொரி. 2:10-12; 1 யோவான் 2:20, 27.

யோவான் 16:13, 14 இல் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தின் ஆவி என்று அழைக்கப்படுகிறார். இங்கே, சத்தியம் என்று அழைக்கப்படுவது வேத சத்தியமேயாகும். சத்தியத்தின் ஆவியாக பரிசுத்த ஆவி நமக்கு எல்லா சத்தியங்களையும் போதிக்கிறார். ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தும் சத்தியம் எழுத்தில் தரப்பட்டுள்ள வேதத்தின் சத்தியம் மட்டுமே என்பதை நாம் ஒருவித சந்தேகமுமில்லாமல் புரிந்து கொள்ள வேண்டும். இது நாம் தனிப்பட்டவிதத்தில் ஒரு அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவியின் வழிநடத்தலல்ல. இன்று அநேகர் இங்கேயே தவறிழைக்கிறார்கள். அவர்கள் ஆவியானவர் வேத சத்தியத்தைத் தவிர வேறு வழிகளில் நம்மை வழி நடத்துவதில்லை என்பதைப் புரிந்து கொள்வதில்லை. தனிப்பட்டவிதத்தில் ஒரு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மட்டுமே அவர்கள் அக்கறை செலுத்துகிறார்கள். ஆனால், ஆவியானவர் வேத சத்தியத்தில் மட்டுமே நம்மை வழி நடத்துகிறார். அவ்வழி நடத்துதலை நாம் வேதத்தை ஊன்றிப் படிப்பதன் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். வேதத்தை ஒரு மூலையில் வைத்துவிட்டு ஆவியானவரின் வழி நடத்துதலை நாடி நின்றால், அசுத்த ஆவி மட்டுமே நம்மை வழி நடத்தும்.

1 கொரி. 2:12-13, நாம் ஆவியானவரைத் தேவனிடம் இருந்தும், தேவன் நமக்குக் கொடுத்துள்ளவற்றை ஆவியானவர் மூலமாக பெற்றுக் கொள்வதற்காகவும் அவரை அடைந்திருக்கிறோம் என்று போதிக்கின்றது. அவ்வாறு தேவன் நமக்குக் கொடுத்துள்ளவைகள் யாவை? 13 ஆம் வசனம், அவை ஆவியானவர் நமக்குப் போதிக்கும் வேத சத்தியங்கள் என்று கூறுகின்றது. 1 கொரி. 2 ஆம் அதிகாரம் சிறப்பான வெளிப்படுத்தல் அற்புதமாக எப்படிச் செயல்படுகின்றது என்பதை விளக்குகின்றது. இப்பகுதியின் 10 ஆம் வசனம், ஆவியானவர் தேவனுடைய ஆழங்களை ஆராய்ந்திருக்கிறார் என்று கூறுகின்றது. 11 ஆம் வசனம் தேவனுக்குரியவைகளை தேவனின் ஆவியாலன்றி ஒருவனும் அறிய முடியாது என்று போதிக்கின்றது. 12 ஆம் வசனம், தேவனின் ஆழங்களையும், அவரது சித்தத்தையும் ஆராய்ந்துள்ள ஆவியானவர், ஒவ்வொரு விசுவாசியிலும் இருந்து தான் அறிந்துள்ளவற்றை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார் என்று கூறுகின்றது!

1 யோவான் 2:20 லும் 27 லும், ஆவியானவரால் விசுவாசிகள் அபிஷேகிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலே இது ஒரு அடையாளமாகக் காணப்படுகின்றது. தீர்க்கதரிசிகளும், அரசர்களும், ஆசாரியர் களும் கர்த்தரால் அழைக்கப்பட்டு, அபிஷேகிக்கபட்டு அவரது ஊழியத்திற்காக தயார் செய்யப்பட்டார்கள். இங்கே ஒரு பெரும் ஒற்றுமையைப் பார்க்கிறோம். ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவை விசுவாசித்த அன்றே வேதத்தை விளங்கிக்கொள்ளுவதற்காக ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறான். இதைப் பெற்றுக்கொள்ளாத கிறிஸ்தவன் இருக்க முடியாது. யோவான் தனது நிருபங்களிலே அக்காலத்தில் நிலவிய தவறான போதனையான, ஒரு சிலரால் மட்டுமே இரகசியமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஞானத்தைப் பற்றி எதிர்த்து எழுதுகிறார். இப்போலிப்போதனைகளுக்கு எதிராக எழுதும் யோவான், கிறிஸ்தவன் ஆவியானவரின் துணையால் மட்டுமே வேத வார்த்தைகளை அறிந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கிறார். அதேவேளை, தேவன் திருச்சபையில் போதிப்பதற்காக போதகர்களை ஏற்படுத்தியிருப்பதையும் யோவான் நிராகரிக்கவில்லை. அக்காலத்தில் நிலவிய போலிப்போதனையான, ஒரு சிலரால் மட்டுமே வேத இரகசியங்களைப் புரிந்து கொள்ளவும், ரோபதிக்கவும் முடியும் என்பதையே யோவான் எதிர்க்கிறார். இன்று ரோமன் கத்தோலிக்க மதம் இதையே போதிக்கிறது. கெரிஸ்மெட்டிக் குழுக்களும் இதையே நம்புகின்றனர். ஆகவே, யோவான் 1 யோவான் 1:4 இல், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன் என்று கூறுகிறார். இதன் மூலம் எல்லாக் கிறிஸ்தவர்களும் தான் எழுதுவதைப் புரிந்துகொண்டு ஆவியில் ஆனந்தமடைய வேண்டு

மென்பதே யோவானின் எதிர்பார்ப்பு.

இதுவரை பார்த்தவற்றை சுருக்கமாகக் கூறினால், நாம் வேதம் போதிப்பதையே நம்பி, அதைப்பின்பற்றி நடக்க வேண்டும். ஏனெனில், 1. தேவன் எல்லா அதிகாரத்தையும் தனக்குள் கொண்டு பேசும்போது அதை நாம் கேட்டு நடக்க வேண்டும். 2. வேதம், தான் கடவுளின் வார்த்தை என்பதற்கான அநேக சான்றுகளைத்தந்து தன்னைத்தானே நிரூபிக்கிறது. 3. நாம் ஜெபத்தோடு வேதத்தைப் படித்து தேவனோடு ஐக்கியத்தில் வரும் போது நமக்குள்ளேயுள்ள ஜீவனுள்ள சாட்சி அதன் அதிகாரத்தில் நமக்கு நம்பிக்கை தருகிறது.

விசுவாச அறிக்கையின் 4 ஆம், 5 ஆம் பாராக்கள் பின்வரும் வேத வசனங்களை நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. இப்போதனைகளைத் தரும் பிரதான வேத வசனங்களாக 2 பேதுரு 1:19-21; 2 தீமோ. 3:16; யோவான் 16:13, 14; 1 கொரி. 2:10-12 ஆகியன உள்ளன. இவற்றிற்குத்துணை புரியும் பகுதிகளாக 2 தெசலோ. 2:13; 1 யோவான் 5:9; 1 யோவான் 2:20, 27 ஆகியன உள்ளன. இவற்றோடு வேதத்தின் அதிகாரத்தை பரிசுத்த ஆவியோடு இணைத்துப் போதிக்கும் வலிமையுள்ள வேதப்பகுதிகளாக யோவான் 14-16 ம் 1 கொரி. 2 ம் உள்ளன. இப்பகுதிகளை நாம் மிகக் கவனத்துடன் படித்துப் புரிந்து கொள்வது அவசியம்.

**பாடம்:** வேதம் உங்களுடைய வாழ்க்கையில் நாம் மேலே பார்த்தவிதத்தில் அதிகாரம் செலுத்துகிறதா? அதுவே உங்களுடைய அதிகாரம் என்று உங்களால் கூற முடியுமா? அதனுடைய வழிகளை மட்டும் பின்பற்றி உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எல்லாத் தீர்மானத்தையும் எடுக்கிறீர்களா? சபைப்போதகர்களும், பெற்றோர்களும், நண்பர்களும் வேதத்தின் அடிப்படையில் உங்களைத் திருத்தவும், வழிநடத்தவும் முயலும்போது அதற்கு எதிராக நீங்கள் நடந்து கொள்கிறீர்களா? இவையே நாம் வேதத்தை உண்மையில் பின்பற்றுகிறோமா என்பதைத் தீமானிக்கின்றன. தாவீது, சங்கீதம் 141:5 இல், "நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்து கொள்ளட்டும். அது என் தலைக்கு எண்ணையைப் போலிருக்கும். என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை" என்று கூறுகிறான். வேதத்தின் அதிகாரத்தை நாம் நம்பினால் அது சொல்கிறபடி நடக்க வேண்டும்.

சில கிறிஸ்தவர்கள் வேத வாசிப்பும், தியானமும் தங்களுக்கு சோர்வை ஏற்படுத்துவதாகக் கூறுவார்கள். தினமும் வேத வாசிப்பில் அவர்களால் ஆனந்தமடைய முடிவதில்லை. இதற்குக் காரணம் வேதமல்ல. வேதத்தில் எந்தவிதமான சோர்வைத்தரும் போதனைகளோ, வரலாற்று நிகழ்ச்சிகளோ இல்லை. இக்கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியோடு முறையான தொடர்பில்லாததாலேயே இவ்வாறு சோர்வடைகிறார்கள். யோவான் 14-16 வரையும் உள்ள வேதப்பகுதிகளை மறுபடியும் வாசித்துப் பார்த்து, நமக்கும் ஆவியானவருக்கும் இருக்கும் உறவைப்பற்றி கிறிஸ்து இயேசு விளக்குவதைப் புரிந்து கொள்ளுங்கள். எபேசியர் 5:18 சொல்கிறபடி வேதத்தை படிக்கும்போது நாம் ஆவியில் நிறைந்திருக்கவேண்டும். ஆவியில் நிறைந்திருப்பது என்றால், வாழ்க்கையில் பாவத்தின் வழியில் போகாமல், ஆவியின் வழியில் நடப்பதாகும். வேதம் கூறுகிறபடி நடந்து கர்த்தரை மகிழ் விக்கிறவன் ஆவியில் தொடர்ந்து நிறைந்திருப்பான். ஆவியில் வழியில் நடந்து, இவ்வாறாக ஆவியில் நிறைந்திருப்பவர்களுக்கு வேதத்தைப் படிப்பதில் சோர்வேற்படாது. மாறாக, அவர்கள் அதில் மூழ்கித்திளைப் பார்கள். நண்பர்களே! கலாத்தியர் 5:25, கூறுவதுபோல் நீங்கள் ஆவியின் வழியில் நடக்கிறீர்களா? ஆவியின் கனிகளை உங்கள் வாழ்க்கையில் காணமுடிகின்றதா? (கலா. 5:22). நீங்கள் ஆவியில் நிறைந்திருக்கிறீர்களா? ஆவியின் துணையோடு மட்டுமே நீங்கள் வேதப்படிப்பில் ஆனந்தமடைய முடியும்.

**பாரா 6:** *தேவனுடைய மகிமைக்கும், மனிதனுடைய இரட்சிப்புக்கும், விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான தேவனுடைய எல்லாத் திட்டங்களும் பரிசுத்த வேதாகமத்தில் திட்டவட்டமாக (வெளிப்படையாக) அல்லது உள்ளடக்கமாக (இன்றியமையா நிலையில், Necessarily contained) காணப்படுகின்றது. இவற்றோடு எக்காலத்திலும், ஆவியின் பெயரில் எந்தவித புதிய வெளிப்பாடுகளையோ அல்லது மனிதமரபுசார்ந்த வழிமுறைகளையோ சேர்க்கக்கூடாது. (இன்றியமையாநிலையில் என்ற பதம் நேரிடையான கட்டளைகளாக இல்லாமல் பொதுவானவகையில் கொடுக்கப்பட்டுள்ள தேவபோதனைகளைக் குறிப்பதாகும். இத்தகைய போதனைகளை நாம் வேதப்பகுதிகளை ஆராய்ந்து அதில் காணப்படும் தெளிவானதும், எளிதில் நிலை நாட்டக்கூடியதுமான முடிவுகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.)*

*ஆயினும், தேவனுடைய வார்த்தையிலே வெளிப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய போதனைகளில் சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு தேவ ஆவியானவரின் ஆன்மீக அறிவொளி அவசியமானதாகும்.*

*அதேவேளை, கடவுள் வழிபாடு மற்றும் சபை ஆட்சியமைப்பு தொடர்புடைய - பொதுவாக எல்லா மனித நடவடிக்கைகளிலும், அமைப்புக்களிலும் கவனிக்கக்கூடியதுமான - சில சந்தர்ப்பங்களை நாம் இயற்கையின் விதிகள், கிறிஸ்தவ விவேகம், வேதாகமத்தின் பொதுவான விதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தீர்மானித்து அவற்றை எக்காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். (உதாரணமாக வாரத்தின் முதல் நாளில் வழிபாட்டிற்காக சபைகூடிவர வேண்டும் என்றுதான் வேதம் சொல்கிறதே தவிர, எந்தெந்த நேரங்களில்கூடிவர வேண்டுமென்று கூறவில்லை. நாம் இயற்கையின் விதிகளைப் பயன்படுத்தி*

*எல்லோருக்கும் வசதியான நேரத்தில் கூடிவர வேண்டும்.)*

*2 தீமோ. 3:15-17; கலா. 1:8-9; யோவான் 6:45; 1 கொரி. 2:9-12; 1 கொரி. 11:13-14; 1 கொரி. 14:26, 40.*

**விளக்கவுரை:**

**உ. வேதத்தின் போதுமான தன்மையும், பரிசுத்த ஆவி அளிக்கும் ஆன்மீக அறிவொளியும் - பாரா 6.**

**1. வேதம் தேவனின் அனைத்து ஆலோசனைகளையும் தன்னில் கொண்டுள்ளது.**

**2. மனிதனுடைய இரட்சிப்புக்கும், விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான அனைத்துக் காரியங்களையும் பற்றி வேதம் போதிக்கின்றது.**

**(அ). கட்டளையாகத்தரப்பட்டுள்ள போதனைகள் (பத்துக்கட்டளைகளைப் போன்றவை)**

**(ஆ). இன்றியமையா நிலையில், உள்ளடக்கமாக காணப்படும் போதனைகள் (பொதுவான விதிகள், பாடங்கள், வலியுறுத்தும் போதனைகள்)**

**3. வேறு எதுவும் சேர்க்கப்படக்கூடாது**

**(அ). ஆவியின் பெயரில் புதிய வெளிப்பாடுகள்.**

**(ஆ). மனித பாரம்பரியங்களும், சடங்குகளும்.**

**4. மனித நடவடிக்கைகளிலும், சமுதாயத்தின் அமைப்புகளிலும் பொதுவாகக் கவனிக்கக் கூடியவை. இவை கீழ்வருவனவற்றால் தீர்மானிக்கப்பட வேண்டும்.**

**(அ). இயற்கையின் விதிகள்**

**(ஆ). கிறிஸ்தவ விவேகம்**

**(இ). வேதத்தின் பொதுவான விதிகள்**

மேலே தரப்பட்டுள்ள ஆறாவது பாராவிற்கான சுருக்கமான படிமுறை விளக்கத்தில் தொடர்ச்சியான ஒரு சிந்தனைப்போக்கைப் பார்க்கலாம். தேவன் நமக்கு பூரணமான வேதத்தைத் தந்துள்ளார். இதவே தேவனின் முழுமையான ஆலோசனையாக உள்ளது. வேதம் நமக்கு இரட்சிப்பை அளித்து, கிறிஸ்தவ வாழ்க்கையின் விசுவாச வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, அதோடு வேறு எதையுமே சேர்க்கக்கூடாது. ஆனால், வேதம் கட்டளையிட்டுப் போதிக்காத அநேகமான காரியங்களில் நாம் நமது ஞானத்தைப் பயன்படுத்தி, வேதத்தின் பொதுவான போதனைகளைப் பயன்படுத்திப் புரிந்துகொள்வதோடு அப்போதனைகளை நம் வாழ்வில் கடைப்பிடிக்கவும் வேண்டும். இதனையே பாரா 6 விளக்குகின்றது.

இவ்வதிகாரத்தின் முதல் பாரா, நாம் தேவனை மகிமைப்படுத்தவும், இரட்சிப்பை அடைந்து, கிறிஸ்தவ வாழ்க்கையை வாழவும் தேவையான அனைத்தையும் வேதம் கொண்டுள்ளதாகப் போதிக்கிறது. இப்போதனைகளனைத்தும் வேதத்தில் நேரடியான கட்டளைகள் மூலமாகவோ அல்லது வேதத்தை வேதத்தோடு ஒப்பிடுவதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய பொதுவான போதனைகள், விதிகள் மூலமாகவோ தரப்படுகின்றன. விசுவாச அறிக்கை திட்டவட்டமாக தரப்பட்டுள்ள போதனைகள் என்று இங்கே குறிப்பிடுவது, பத்துக்கட்டளைகள், மற்றும் பழைய ஏற்பாட்டிலுள்ள அனைத்துக் கட்டளைகளையும், புதிய ஏற்பாட்டில் காணப்படும் அனைத்து நேரடிக்கட்டளைகளையும், போதனைகளையுமாகும். இத்திட்டவட்டமான நேரடியான போதனைகளைத்தவிர உள்ளடக்கமாகவும் தேவனுடைய போதனைகள் வேதத்தில் காணப்படுவதாக விசுவாச அறிக்கை தெரிவிக்கிறது. இவையும் நமக்கு இன்றியமையாதவையாக உள்ளன. இப்போதனைகள் கட்டளைகளாகக் கொடுக்கப்படாமல், நாம் வேதப்பகுதிகளை ஏனைய வேதப்பகுதிகளோடு ஒப்பிட்டுப்படித்து அறிந்து கொள்ள வேண்டிய பொதுவான போதனைகள் மற்றும் விதிகளாகவும், வேதத்தில் காணப்படும் பாத்திரங்களின் வாழ்க்கையின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதனைகளாகவும், உவமைகள், உருவகங்கள், அடையாளங்கள் ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதனைகளாகவும் காணப்படுகின்றன. இவையே தேவனின் முழு வெளிப்பாடாகும், முழு ஆலோசனையுமாகும்.

“தேவனுடைய ஆலோசனை” (The whole counsel of God) என்ற பதம் அப்போஸ்தலர் 20:27 இல் காணப்படு

கின்றது. மிகவும் ஆழமான சத்தியத்தை வெளிப்படுத்தும் இப்பதங்கள், தேவன் பேசி இறுதியில் எழுத்தில் வடித்துத்தந்துள்ள அவரது முழு வெளிப்பாட்டையும் குறிக்கின்றது. பேதுரு, 2 பேதுரு 1:3 இல், இவ்வுலகில் பக்திவிருத்தியோடு வாழத்தேவையான அனைத்தையும் கிறிஸ்துவுக்குள்ளான அறிவில் தரப்பட்டுள்ளாதாகத் தெரிவிக்கிறார். இவ்வறிவை வேதத்திலிருந்தே பெற்றுக் கொள்கிறோம்.

வேதம் இவ்வுலகிலும், சபையிலும் நமது வாழ்க்கையிலும் தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பூரணத்துவத்தைக் கொண்டிருக்கிறது என்பதையே வேதம் போதுமானது என்று கூறுவதன் மூலம் நாம் குறிப்பிடு கிறோம். கட்டிடங்களை எழுப்புவதற்கோ, விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளவோ அல்லது வியாபார அறிவை அதிகரித்துக்கொள்ளவோ வேதம் கொடுக்கப்படவில்லை. இவ்வொவ்வொன்றிற்கும் வேதத்திற்கும் நிச்சயமாகத் தொடர்பிருக்கின்றது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், விஞ்ஞானம், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றில் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான கைநூலாக வேதத்தைக் கர்த்தர் நமக்கு அளிக்கவில்லை. இக்காரியங்களைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் வேதம் நிச்சயமாக உண்மையையே வெளிப்படுத்துகின்றது. அத்தோடு. இவையனைத்திற்கும் வேதத்திற்கும் பெருந்தொடர்பிருக்கின்றது. எந்தவொரு காரியத்திற்குமான அடித்தளத்தை ஏற்படுத்தித் தரும் வேதம் அக்காரியத்தைப்பற்றிய படிப்புப்போக வேண்டிய பாதையையும் நிர்ணயிக்கின்றது.

ஆனால், வேதம் பாவிகளை கிறிஸ்துவிடத்தில் வழி நடத்துவதற்குப் போதுமானதாகவும், அதற்கு அவசியமான அனைத்தையும் தனக்குள் கொண்டதாகவும் உள்ளது. கிறிஸ்தவர்கள் விசுவாசத்துடன் வாழ்வதற்குத் துணை செய்யக்கூடிய அனைத்தையும் பூரணமாகத் தன்னில் கொண்டுள்ளது. இப்போதனை நமக்கு உற்சாகமளிக்கு மொன்றாகவும், அதேநேரம் நமக்கு எச்சரிக்கையாகவும் அமைந்துள்ளது. பாவிகளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் தேவையான அனைத்தையும் வேதம் தன்னில் கொண்டிருப்பதால் அவ்வெளிப்பாட்டோடு எவரும் வேறு எதையும் சேர்க்கக் கூடாது. விசுவாச அறிக்கை வரலாற்றில் இருவழிகளில் வேதத்துடன் புறமனித வெளிப்பாடுகளை சேர்க்கும் முயற்சிகள் இருந்துள்ளமையை சுட்டிக்காட்டுகின்றது.

(1). இதில் முதலாவது, **ஆவியின் வெளிப்படுத்தல்களாகும்.** கிறிஸ்தவ திருச்சபையின் ஆரம்ப காலத்திலேயே இம்முயற்சிகள் நடந்துள்ளன. 1 கொரிந்தியர் 12-14 வரையும் காணப்படும் போதனைகளில் பவுல் அப்போஸ்தலன் இம்முயற்சிகளையே கண்டித்துத் திருத்துகிறார். கிறிஸ்தவ சபை வரலாற்றின் ஆரம்ப காலத்தில் மொன்டனஸ் (Montanus) என்ற மனிதர் இதனை ஆரம்பித்து வைத்ததோடு அவரால் உருவாக்கப்பட்ட இயக்கமும் மொன்டனிசம் (Montanism) என்ற பெயரைப்பெற்றது. திருச்சபையில் அக்காலத்தில் காணப்பட்ட ஆவிக்குரிய வாழ்வில் உயிரற்ற தன்மையை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வியக்கம் உருவானது. இதன் காரணமாகவே தேவ மனிதர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்ளுபவர்கள் ஆவியின் பெயரால் புதிய வெளிப்பாடுகளை அளிப்பதும், அற்புதவரங்களைப் பயன்படுத்தும் நிலைமையும் தோன்றியது. இவ்வியக்கம் முறையாக வேதத்தைப் படிக்கும் முறையை நிராகரித்து வேத அறிவைவிட அனுபவமே மேலானது என்று வலியுறுத்தியது. சபை வரலாற்றில் டேர்டுலியன் (Tertullian) இதனையே பின்பற்றியதை வாசிக்கலாம். பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்களுக்கும், வாட்ச்மன் நீ, அன்ட்ரு மரே, எப். பீ. மேயர் போன்றோரின் போதனைகளுக்கும் இவ்வியக்கமே முன்னோடியாக இருந்துள்ளது.

இன்று அநேக சுவிஷேச இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், ஆவியானவர் வேதத்தைத்தவிர தொடர்ந்தும் வேறு வெளிப்படுத்தல்களை அளித்துக்கொண்டிருப்பதாக வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனைத் தீர்க்கதரிசனத்தின் மூலம் ஆவியானவர் செய்து வருவதாக அவர்கள் வாதிடுகிறார்கள் (1 கொரி.12, 14). எவராவது சபைக்கூட்டம் நடக்கும்போது எழுந்து நின்று ஆவியின் பெயரில் கர்த்தரின் செய்தியை அளிக்கலாம் என்று கூறி வருகிறார்கள். இத்தகைய செய்தி ஒரு தனிப்பட்ட நபருக்காகவோ அல்லது சபைக்காகவோ இருக்கலாம். இச்செய்தி அவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தரின் சித்தம் என்ன என்று வெளிப்படுத்துவதாக இருக்கிறது என்று இவர்கள் நம்புகிறார்கள்.

*(ஆங்கிலத்தில் வாசிக்கக் கூடியவர்கள்* O. Palmar Robertson *எழுதிய* The Final Word (Banner of Truth Trust) *என்ற நூலைப்பெற்று வாசிப்பது நல்லது. 1993 இல் வெளிவந்த இந்நூல் இவற்றை வேதபூர்வமாக ஆராய்கிறது.)*

மேலே நாம் குறிப்பிட்ட போக்கு வேதத்தின் அதிகாரத்தையும், அதன் போதுமான தன்மையையும் நிராகரிப்பதாக உள்ளது. நாம் எந்தவிதமான தொழிலைச் செய்ய வேண்டும்? அல்லது எங்கே வாழ வேண்டும் எனறு சொல்வதற்கு ஒரு தீர்க்கதரிசி தேவையா? யாரிடமாவது ஒரு முக்கியமான விடயத்தைப் பேசுவதற்கு நமக்கு ஆவியின் வெளிப்படுத்தல் தேவையா? வேதம் பூரணமானது என்றும் கர்த்தரின் வெளிப்படுத்தல் அதில் மட்டுமே காணப்படுகின்றது என்றும் நம்புகிறவர்களுக்கு **இவை அவசியமில்லை.** ஆனால், நமது வாழ்க்கைக்கும், விசுவாசத்திற்கும் போதுமானதாக வேதம் எவ்வாறு செயல்படுகின்றது என்ற வினாவிற்கு நாம் பதிலளிக்கத் தான் வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து, வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்து படிக்கும்போது, கர்த்தர் நாம் கற்றுக் கொள்ளும் வேதபோதனைகளின் மூலம் நம்மை வழி நடத்தி வாழ்க்கையில் எல்லாத் தீர்மானங்களையும் எடுக்கும்படிச்செய்கிறார் என்பதே இக்கேள்விக்கான சரியான

பதிலாகும்.

ஆவியானவர் வேத போதனைகளில் நம்மை வழிநடத்துவதைத்தவிர வேறு புதிதாக ஒன்றையும் வெளிப்படுத்துவதில்லை. அவர், ஏற்கனவே கர்த்தர் தந்துள்ள வேத வசனங்களில் நமக்கு விளக்கத்தைக் கொடுக்கிறார். அவற்றைப்புரிந்து கொள்ள உதவுகிறார். இப்போதனையையே விசுவாச அறிக்கையின் இப்பகுதி விளக்குகிறது. இதற்கு ஆதாரமாக இது 1 கொரி. 2:9-12 ஆகிய வேத பகுதியைச் சுட்டிக்காட்டுகிறது.

வேதம் போதிக்கின்ற காரியங்களில் இரட்சிப்புக்குரிய விளக்கங்களைப்பெற்றுக்கொள்ள பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் அறிவொளி (விளக்கம்) மிகவும் அவசியமானது. வேதத்திற்கும், ஆவியானவருக்கும் இடையில் உள்ள மிகமுக்கியமான இத்தொடர்பை நமது முன்னோர்களான சீர்திருத்தவாதிகள் மிகவும் வலியுறுத்திப் போதித்துள்ளனர். பரிசுத்த ஆவியானவர் வேதத்தில் நமக்குத் தெளிவை அளிக்கிறார். அவர் வேதத்தின் மூலமே நம்மோடு பேசுகிறார். வேதம் பேசுகிறபோது அவரே பேசுகிறார். வேதத்திற்கு வெளியில் இருந்து அவர் ஒரு போதும் பேசுவதில்லை. பரிசுத்த ஆவியானவரின் துணையோடு மட்டுமே வேதத்தை எவரும் புரிந்து கொண்டு அதற்கு அடிபணிய முடியும். நமது விசுவாசக்கண்களுக்கு வேதத்தில் அறிவொளியை ஏற்படுத்தி, அதன் அற்புதமான போதனைகளை நாம் புரிந்து கொள்ளும்படிச்செய்து பரிசுத்த ஆவியானவர் நமக்கு இவ்விதமாகத் துணைபுரிகிறார்.

யோவானுடைய சுவிஷேசத்தில் நமது ஆண்டவர் ஆவியானவரைப்பற்றி இருவிதமான சந்தர்ப்பங்களில் போதித்த போதனைகளை நினைத்துப் பாருங்கள். யோவான் 7:38, 39 ஆகிய வசனங்களில், “விசுவாசிக்கிறவனுடைய உள்ளத்தில் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்” என்று (38) கூறி, “விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்தே இப்படிச் சொன்னார்” (39) என்று இவ்வசனங்களில் யோவான் நினவூட்டுவதை வாசிக்கிறோம். ஆவியானவர் இவ்வாறே விசுவாசிகளில் செயல்படுகிறார். கிறிஸ்துவைப்பற்றிய நம்பிக்கையை அளித்து நாம் அவரை விசுவாசித்து வளரும்படிச் செய்வதே ஆவியானவரின் செயல் என்பதை இது விளக்குகிறது. இத்தகைய அனுபவத்தை நாம் கிறிஸ்துவை அருந்துவதால் மட்டுமே அடைய முடியும். அதாவது கிறிஸ்துவை அறிந்து கொண்டு அவரோடு ஐக்கியத்தில் வருவதையே இவ்வாறு கூறுகிறோம்.

அத்தோடு, பரிசுத்த ஆவியானவர் தாம் போதித்த போதனைகளை நமது நினைவுக்குக் கொண்டுவந்து அவற்றை நாம் பின்பற்றும்படிச் செய்வார் என்றும் கிறிஸ்து போதித்துள்ளார். இதை யோவான் 16:14 இல் வாசிக்கிறோம். அதாவது, ஆவியானவர் நாம் கிறிஸ்துவை நினைவுகூறும்படியும், அவரது போதனைகளில் ஆர்வம்கொண்டு அவற்றைக் கடைப்பிடிக்கும்படியும் செய்வார். கிறிஸ்துவைப்பற்றியல்லாத வேறு வேலைகளை பரிசுத்த ஆவியானவர் செய்வதில்லை. இன்றைய கெரிஸ்மெட்டிக் இயக்கம் இங்கேயே பெருந்தவறிழைக்கிறது. அந்நிய பாஷையில் பேச முயற்சிப்பதன் மூலமும், அற்புதங்கள் செய்ய முயற்சிப்பதன் மூலமும், வேறும் கோமாளித்தனமான காரியங்களைச் செய்வதன் மூலமும் அவர்கள் ஆவியானவரின் செயற்பாட்டை வலியுறுத்த முனைந்து கிறிஸ்துவுக்கும் வேதத்திற்கும் முரணாக நடக்கிறார்கள். இத்தகைய காரியங்களைச் செய்வதில் காலத்தைச் செலவிடும்படி கிறிஸ்து எங்குமே போதிக்கவில்லை. இவற்றின் மூலம் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒருவரும் வளரவும் முடியாது.

யோவான் 14-16 வரையுள்ள அதிகாரங்களை வாசித்துப் பார்த்தீர்களானால் பரிசுத்த ஆவியைப்பற்றிய புதிய ஏற்பாட்டின் அனைத்து முக்கியமானமான போதனைகளையும் அங்கே பார்க்கலாம். புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளில் தரப்பட்டுள்ள ஆவியானவரைப் பற்றிய போதனைகளுக்கெல்லாம் இப்பகுதியே அடித்தளமாக உள்ளது. அதாவது இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள போதனைகளுக்கு முரணாக மற்றப்பகுதிகளுக்கு நாம் விளக்கமளிக்கக் கூடாது. இப்பகுதிகளில் அந்நிய பாஷைபற்றியோ, அற்புதங்கள் பற்றியோ கிறிஸ்து எதுவுமே கூறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இங்கே, சத்தியத்தை வெளிப்படுத்தும் ஆவியானவரின் முக்கியமான செயலைப்பற்றியே கிறிஸ்து போதிக்கிறார். இவ்விதமாகவே ஆவியானவர் நமக்கு வேதத்தில் தெளிவை அளிக்கிறார்.

அத்தோடு, ஆவியானவரின் வேதத்தில் நமக்குத்தரும் ஆன்மீக அறிவொளியை, அதாவது விளக்கத்தை நாம் ஒரு இரகசியமான செயலாகவோ அல்லது மனத்திற்கெட்டாத, அறிவுபூர்வமற்ற ஒரு அனுபவமாகவோ எண்ணி விடக்கூடாது. ஆவியானவர் அளிக்கும் அறிவொளி அறிவுபூர்வமானதும், வேதபூர்வமானதுமாகும் (1 கொரி. 2:13).

இதுவரை வேதத்தோடு புறமனித வெளிப்பாடுகளை சேர்க்கமுனையும் இருவழிகளில் முதலாவதான ஆவியின் பெயரில் வேதத்திற்கு புறம்பான வெளிப்படுத்தல்களை தோற்றுவிக்கும் செயல்களைப் பார்த்தோம்.

**(2).** இரண்டாவதாக, **வேதத்தோடு மனித பாரம்பரியங்களை சேர்க்க முனையும்** செயலைப்பார்ப்போம். ரோமன் கத்தோலிக்க மதம் தனது கவுன்ஸில்களின் போதனைகளையும், பாப்பையரின் சிந்தனைகளையும், தீர்மானங்களையும் வேதத்துடன் சேர்த்துக்கொண்டுள்ளது.

விசுவாச அறிக்கையை நமக்களித்துள்ள சீர்திருத்தவாதம் மேல்குறிப்பிட்ட இவ்விரு சிந்தனைப்போக்கிற்கும்

எதிராகப்போராடியது. நாமும் அதேபோல் இவற்றிற்கெதிராகப் போராட வேண்டும். நாம் ஆவியானவரால் வழி நடத்தப்பட வேண்டும் (ரோமர் 8:14); ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும் (எபேசி. 5:19); ஆவியில் நடக்க வேண்டும் (கலா. 5:16, 25); ஆவியைத் துக்கப்படுத்தக்கூடாது (எபேசி. 4:30); ஆவியை அவித்தலாகாது (1 தெசலோ. 5:19). ஆனால், ஆவிக்குரிய இவ்வெல்லாக்காரியங்களையும், விசுவாச அறிக்கை கூறுவதுபோல், ஆவியானவர் "வார்த்தையில் இருந்தும், வார்த்தையின் மூலமுமே" எமது இருதயங்களில் செய்கிறார் (பாரா 5). வேதத்துடன் எதையும் சேர்க்கும் முயற்சிகளை நாம் முறியடிக்க வேண்டும். வேதத்தைத் தவறான முறையில் விளங்கிக்கொள்வதன் மூலமும், தவறாகப்புரிந்து கொண்டவைகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலமுமே பலர் வேதத்தோடு வேறு காரியங்களை இணைக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் வேதத்தை சரிவரப்புரிந்து கொண்டு அதன் போதனைகளின்படி வாழாதபோது அவர்களுடைய வாழ்க்கை வேதவாழ்க்கையாக அமையாமல் உலகப்பிரகாரமானதாக அமைகின்றது. இது கிறிஸ்தவர்கள் வேதத்துடன் உலக ஞானத்தை இணைப்பதாகும். அதுமட்டுமல்லாமல், வேதம் போதித்தவற்றிற்கும் மேலான காரியங்களை பிறர் வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்கும்போது அச்செயலும் வேதத்துடன் வேறு காரியங்களை இணைப்பதாகும். பரிசேயர்கள் இதையே செய்து வந்தனர் என்பதை இயேசு வெளிப்படுத்தியுள்ளார் (மத்தேயு 15:1-14; 23:1-36).

இறுதியாக, விசுவாச அறிக்கையின் இப்பகுதி மனித நடவடிக்கைகளிலும், சமுதாயத்திலும் காணக்கூடிய ஒரு பொதுவான தன்மையைக் கிறிஸ்தவ சபையிலும்காண முடியும், காண வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. முக்கியமாக இதனை சபை ஆராதனை சம்பதந்தமான விடயங்களில் பார்க்கலாம். இதற்கு ஆதாரமாக விசுவாச அறிக்கை 1 கொரி. 11:13, 14; 1 கொரி. 14:26, 40 ஆகிய பகுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. முக்கியமாக இவற்றில் 1 கொரி 14 ஆவது அதிகாரத்தைப் பார்ப்போம்.

திருச்சபையில் "சகலமும் (எல்லாக்காரியமும்) நல்லொழுக்கமாகவும் கிரமமாயும் (ஒழுங்குமுறையோடு) செய்யப்படவேண்டும்" என்று கூறும் பவுல் அதற்கான காரணத்தை 33 ஆம் வசனத்தில் தருகிறார், "தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்." புதிய ஏற்பாட்டுச்சபை அமைப்புக்குத் தேவையான அடிப்படையான போதனைகளை வேதம் தந்தபோதும், அதன் அநேக காரியங்களை இயற்கையின் விதிகளையும், கிறிஸ்தவ ஞானத்தையும், வேதத்தின் பொதுவான விதிகளையும் பயன்படுத்தித் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.

இவை இரண்டிற்குமிடையில் உள்ள வேறுபாட்டை நாம் எவ்வாறு அறிந்து கொள்வது? முதலாவதாக, புதிய ஏற்பாட்டில் ஆராதனைபற்றி தெளிவான போதனைகள் காணப்படும் முக்கியமான வேதப்பகுதிகளை நாம் ஆராய வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் 2:42, ஆராதனையின் முக்கிய அம்சங்களான போதனை, திருவிருந்து, ஐக்கியம், சபை ஆராதனை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகின்றது. மேய்த்தலுக்கான நிருபங்கள் என்று அழைக்கப்படும் புதிய ஏற்பாட்டின் தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்கள் சத்தான போதனைகளின் அவசியத் தைச் சுட்டிக்காட்டுவதோடு, எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16 ஆகிய பகுதிகள் நற்செய்தி ஊழியம், சங்கீதம், கீர்த்தனைகள் பாடுதல் என்பவற்றின் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றன. இவையே சபை மக்கள் ஆராதனையில் பின்பற்ற வேண்டியவை. இன்று இவற்றை நாம் வலியுறுத்திப் போதிக்க வேண்டியது அவசியம். சபைத்தலைவர்களின் வழிநடத்தலுக்குட்பட்டு சபையார் இவற்றையே சபைகளில் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனால், இவற்றைப்பின்பற்றுவதற்கு அவசியமான பல காரியங்களை சபையார் சபைத்தலைவர்களின் வழிநடத்த லின்படித் தீர்மானித்துப் பின்பற்றுதல் அவசியம். அத்தகைய காரியங்கள் யாவை? எத்தனை தடவைகள் ஆராதனைக்குக்கூடிவருதல் வேண்டும்? அக்கூட்டங்கள் எவ்வளவு நேரம் நடக்க வேண்டும்? சபை ஐக்கியத்திற்கு அவசியமான கூட்டங்களை ஏற்பாடு செய்தல், சுவிஷேச ஊழியத்திற்கான கூட்டங்கள், மற்றும் சபை அங்கத்தவர் களுக்கான கூட்டங்கள், இதுபோன்ற வேறும் பல காரியங்களுக்கான தீர்மானங்களை எடுக்கும்போது அவைபற்றி வேதம் நேரடியான போதனைகளை அளிக்காமல் பொதுவான போதனைகளையே அளிப்பதால் நாம் கிறிஸ்தவ விவேகத்தையும், இயற்கையின் விதிகளையும் பயன்படுத்தி வேதபூர்வமான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

விசுவாச அறிக்கை இதனைப்பற்றிப் போதிக்கும்போது, ஆராதனையுடன் நாம் வேதம் குறிப்பிட்டுப்போதிக்கும் அம்சங்களுடன் வேறு எதனையும் சேர்க்கும்படிப் போதிக்கவில்லை. ஆராதனையில் வேதம் குறிப்பிட்டுப் போதிக்காத எதையும் சேர்க்கும் முயற்சியில் சபைகள் ஈடுபடக்கூடாது. ஆராதனை கவர்ச்சியாக இருக்க வேண்டும் என்று கர்த்தருக்குப்பிடித்தமில்லாததை செய்ய முற்படக்கூடாது.

பாரா 6 ற்கு ஆதாரமாக விசுவாச அறிக்கை 2 தீமோ. 3:15-17; 1 கொரி. 2:9-12 ஆகிய பகுதிகளைச் சுட்டிக் காட்டுகின்றது. இவற்றோடு, கலா. 1:8,9; யோவான் 4:45; 1 கொரி. 11:13,14; 14:26,40 ஆகிய பகுதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**பாடம்:** புதுமையானவற்றையும், நவீனமானவற்றையும் நாடி ஓடும் கலாச்சாரத்தைப்பின்பற்றும் மக்கள் வாழும் ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய போக்கு நம்மை நிச்சயமாகப்பாதிக்கின்றது என்ற நிதர்சனமான உண்மையை நம்மால் மறுக்க முடியாது. ஆனால், மாறாத்தன்மை கொண்ட நம் தேவனும், முற்றுப்பெற்ற அவரது வெளிப்படுத்தலும் இப்போக்கிற்கு இடம் தருவதில்லை. உண்மையில் கூறப்போனால்

பழையதையே புதிதானதாகவும், புதுமையானதாகவும் காட்டுகிறவராக நம்தேவன் இருக்கிறார். லூக்கா 2:24:32 இல், எம்மாவு செல்லும் வழியில் கிறிஸ்து தனது இரு சீடர்களிடத்திலும் வேதத்தை விளக்கிப்பேசியபோது அவர்களுடைய இருதயம் பற்றி எரியத்தொடங்கியதாக வாசிக்கிறோம். இது எதைப்போதிக்கின்றதென்றால், வேதம் தானே தன்னை எமக்கு வெளிப்படுத்தும் வல்லமையைக் கொண்டு போதுமானதாக அமைந்திருக்கிறது என்பது தான். ஒளி நமக்குப்பாதையைக் காட்டுவதுபோல் முற்றுப்பெற்ற, பூரணமான வேதம் பரிசுத்த ஆவியின் கிரியையின் மூலமாக நமக்கு வழிகாட்டியாக அமைகின்றது. அது நமக்கு தேவ சித்தத்தை வெளிப்படுத்தி, கர்த்தருடைய பிரசன்னத்தையும் உணரச்செய்கிறது. ஆகவே, வேதம் நமது மனத்திற்கு மட்டும் உணவளிக்காமல் நமது உணர்வுகளையும் தூண்டுகிறது.

இக்காலத்தில் பலர் ஆராதனையைக் கவர்ச்சியுள்ளதாக்குவதற்கு நாடிஓடுகின்ற வேதத்திற்குப் புறம்பான அமசங்கள் நமக்குத்தேவையில்லை.

**பாரா 7:** *வேதத்தின் உள்ளடக்கங்கள் அனைத்தும் சமமான தெளிவினைக்கொண்டிராதது மட்டுமன்றி, எல்லா மனிதர்களும் அதில் சமமான தெளிவும் பெற்றிருப்பதில்லை. ஆனாலும், மனிதன் அறிந்து, விசுவாசித்து, கீழ்ப்படிய வேண்டிய இரட்சிப்பிற்கு இன்றியமையாதவைகள் அனைத்தும், படித்த அல்லது படிக்காத மனிதர்கள், சாதாரண வழிமுறைகளைத் தகுந்த முறையில் பயன்படுத்திப் போதுமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளும்வகையில், வேதத்தின் ஒரு பகுதியில் அல்லது இன்னொன்றில், தெளிவாக முன்னுரைக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. (அச்சாதாரண வழிமுறைகளாவன: பயபக்தியோடு கூடிய வேதவாசிப்பும், அதன் அருளுரையைக்கேட்டலும், கற்பிக்கத்தக்க மனப்பான்மையும் ஜெபமுமாகும். அத்தோடு, விசுவாசிகளின் துணை.)*

*2 பேதுரு 3:16; சங். 19:7; 119:130.*

**விளக்கவுரை:**

**உ. வேதத்தின் தெளிவான தன்மை – பாரா 7**

1. **எல்லா வேதப்பகுதிகளும் இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியவை அல்ல.**
2. **இரட்சிப்புக்கு இன்றியமையாதவைகளை வேதம் தெளிவாக விளக்குகின்றது.**

வேதம் தன்னில் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய பகுதிகளையும், புரிந்துகொள்ளக் கடினமான சிலபகுதி களையும் கொண்டுள்ளது என்பது கிறிஸ்தவர்கள் அறிந்த உண்மை. ஆனால், கர்த்தரை அறியாதவர்கள், வேதம் புரிந்த கொள்ள முடியாததொன்றாக இருப்பதாலேயே அதற்கு விளக்கம் கொடுப்பவர்களால் அதனை சரியாக விளக்க முடியவில்லை என்று கூறுவார்கள். இவர்களுடைய கூற்று, வேதத்தில்தான் தவறிருப்பதுபோல் பொருள் தருகிறது.

ஆனால், நமது விசுவாச அறிக்கை, வேதம் தெளிவுள்ளது என்ற அடிப்படை உண்மையைப் போதிக்கின்றது. வேதத்தின் சில பகுதிகள் மட்டும் தெளிவானவை, ஏனைய பகுதிகள் தெளிவற்றவை என்று இது கூறவில்லை. ஆனால், வேதம் முற்றும் தெளிவானதாக இருப்பதோடு, இரட்சிப்புக்கு இன்றியமையாத போதனைகளை அளிக்கும் பகுதிகளில் எவரும் புரிந்து கொள்ளக்கூடிய தெளிவைக்கொண்டுள்ளது என்றும் போதிக்கின்றது. இக்காரியங்களில் படித்தவர்களும், படிக்காதவர்களும் சாதாரணமான முறைகளைப் பயன்படுத்தி வேதத்தைப்படித்து போதுமான அறிவைப்பெற்றுக் கொள்ள முடியும் என்று போதிக்கின்றது.

பாரா 6 ஐப்படிக்கும்போது, வேதத்தின் இரட்சிப்புக்குரிய போதனைகளைப் புரிந்துகொள்ள நமக்கு பரிசுத்த ஆவியின் துணை அவசியம் என்று படித்தோம். ஆனால், விசுவாச அறிக்கையின் இப்பாரா, அவ்வேதப் படிப்பில் நமது கடமை என்ன என்பதை விளக்குகிறது. அதாவது, கர்த்தரை நாடுதல், வேதத்தை ஊக்கத்தோடு படித்தல், தேவ ஞானத்திற்காக ஜெபித்தல், சரியான முறையில் வேதத்தை விளங்கிக்கொள்ளப்பயன்படுத்த வேண்டிய விதிகளைப்பயன்படுத்திப்படித்தல் ஆகியனவே நமது கடமைகளாகும். இவற்றை நாம் முறையாக செய்யும்போது வேதத்தை நாம் தெளிவாகப்புரிந்து கொள்ள முடியும். வேதம் தெளிவானது என்று கூறும் போது இதையே நாம் குறிப்பிடுகிறோம். வேதத்தைப் படித்துப்புரிந்து கொள்வதற்கு ஒருவரும் ஞானிகளாக இருக்க வேண்டிய அவசியமி ல்லை. வேத அறிவுள்ள ஞானவான்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி கூற வேண்டும். ஆனால், வேதம் அவர்களுக்காக மட்டும் கொடுக்கப்படவில்லை, அது நமக்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது. சங்கீதக்காரன் 19:7-9; 119:130 கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

அதேநேரம், வேதத்தில் நம்மால் புரிந்து கொள்ளக் கடினமான பகுதிகளும் காணப்படுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. இவை நம்மால் புரிந்து கொள்ளக் கடினமான பகுதிகளாக இருந்தபோதும், புரிந்து கொள்ள முடியாத பகுதிகளல்ல. இதைக்குறிப்பிட்டுக்காட்டும் சில வேதப்பகுதிகளைப் பார்ப்போம். பேதுரு 2 பேதுரு 3:16

இல், பவுலுடைய நிருபங்களைப் பற்றிப் பேசும்போது, "அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது, கல்லாதவர்களும், உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்" என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

இதைக்குறித்துப்போதிக்கும் இன்னுமொரு வேதப்பகுதி 2 தீமோ. 4:3. இங்கே பவுல், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாத காலம் வரும் என்று குறிப்பிடுகிறார். பவுல், சத்தானதும், ஆழமானதும், ஆரோக்கியமானதுமான உபதேசங்களை நிராகரிக்கும் கூட்டத்தைப்பற்றி இங்கே பேசுகிறார். இத்தகைய கூட்டத்தாரைப்பற்றியே யோவான் 6:60 பின்வருமாறு கூறுகின்றது, "அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்ட பொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக்கேட்பார்கள் என்றார்கள்". வேத சத்தியங்களையும், வேதவரலாற்றையும் முறையாகப் படித்துப் புரிந்து கொள்ளும் ஆன்மீக வல்லமையற்றவர்களாக இருந்ததாலேயே இவர்களால் உபதேசங்களைப்புரிந்து கொள்ள முடியவில்லை. இதன் காரணமாகவே வேதத்தின் சில பகுதிகள் புரிந்துகொள்ளக் கடினமானவையாக இருப்பதாகக் கூறுகிறோம். ஆகவே, இவற்றைப் படிப்பவர்கள் நேரத்தை செலவிட்டு, வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டு, ஜெபத்தோடு உடல்வருந்திப் படித்தல் அவசியம்.

மேலும் உவமைகள் மற்றும் வேதத்தின் கடினமான உபதேசப்பகுதிகளும் வேதத்தின் எல்லாப் பகுதிகளும் இலகுவாகப்புரிந்து கொள்ளக்கூடிவையல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்றன். வேதத்தில் அறிவுள்ள போதகர்கள் அதன் இறையியலையும், வரலாற்றையும், அவற்றை நம் வாழ்வில் பயன்படுத்த வேண்டிய முறைகளையும் நமக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியத்தை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்காகவே திருச்சபைக்கு இயேசு கிறிஸ்து போதகர்களை அளித்துள்ளார் (எபேசியர் 4:11). போதகர்கள் இல்லாமல் வேதத்தை நாம் புரிந்து கொள்ள முடியாது என்று நாம் தப்பாகப்புரிந்து கொள்ளக்கூடாது. ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கையில் சத்தான போதனைகளைப்பின்பற்றி வளர்ந்து, போலிப்போதனைகளில் இருந்து நம்மைக் காத்துக்கொள்ள கிறிஸ்துவே நமக்கு சபையில் போதகர்களை ஏற்படுத்தித்தந்துள்ளார். இதை எபேசியர் 4:1–16 வரையிலான பகுதிகள் மிகத் தெளிவாகப் போதிக்கின்றன.

**பாரா 8:** *பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் (அதாவது, மொழிபெயர்க்கப்படுவதற்கு முன்பிருந்த அவற்றின் மூலமொழிகளில்) நேரடியாக தேவனால் ஏவப்பட்ட நாட்தொடக்கம், அவரது தனிப்பட்ட கவனத்தாலும், முன்னுணர்வாலும் பரிசுத்தமாக பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, அவை நம்பிக்கைக்குறியவையாதலால், சகலவித மதம் சம்பந்தமான விவாதத்திற்குரிய காரியங்களிலும் திருச்சபை, அவற்றின் போதனையையே தீர்வாகவும் இறுதியானதாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடவுளின் மக்கள் அனைவருக்கும் வேதத்தில் உரிமையும் ஆர்வமும் இருப்பதோடு, அவர்கள் அதை தேவபயத்தோடு படிக்கவும், ஆராயவும் வேண்டுமென கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஆனால், எல்லோருக்கும் எபிரேய, கிரேக்க மொழிகள் தெரிந்திராததால், வேதமளிக்கும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நம்பிக்கையைப்பெற்றுக்கொள்ளும்படி வேதம், எல்லா உலக மொழிகளிலும் துல்லியமாக மொழி பெயர்க்கப்படவேண்டும்.*

*ரோமர் 3:2; ஏசாயா 8:20; அப்போஸ். 15:15; யோவான் 5:39; 1 கொரி. 14:6, 9; 11-12; 24, 28; கொலோ. 3:16.*

**விளக்கவுரை:**

**ஊ. வேதம் பாதுகாக்கப்பட்டவிதமும், அதன் மொழிபெயர்ப்பும் – பாரா 8**

1. **வேதம் தேவ ஆவியால் அருளப்பட்டது.**
2. **வேதம் கர்த்தரின் பாராமரிப்பினால் இவ்வுலகில் பாதுகாக்கப்படுகிறது.**
3. **எனவே, வேதம் நம்பத்தகுந்தது.**
4. **ஆகவே, வேதம் எல்லா நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.**

இப்பாரா வேதம் எவ்வாறு எழுதப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதைப்போதிக்கிறது. வேதம் எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. அது கர்த்தரால் பராமரிக்கப்பட்டு, எக்காலத்திலும் பரிசுத்தமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. வேதம் எவ்வளவு கவனமாக கர்த்தரின் பராமரிப்பின் கீழ் மூலத்தில் இருந்து அவரது ஊழியர்களால் எழுதப்பட்டு நமக்குக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதையே இப்பாரா சுட்டிக்காட்டுகின்றது. வேதம் எல்லா மனித மொழிகளிலும் மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே இப்பாரா இதைச்சுட்டிக்காட்டுகின்றது. எல்லோரும் மூல மொழிகளில் வேதத்தை வாசிக்கக்கூடிய ஞானத்தைக் கொண்டிராததாலேயே அது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

எல்லோரும் தங்களுடைய மொழிகளில் வேதத்தை வாசிக்க வேண்டும்.

**பாரா 9:** *திருமறையை திருமறையால்தான் விளக்க வேண்டும் என்பது திருமறையின் பொருள் விளக்கங்குறித்த தவறிழைக்கவியலாத (Infallible) ஒரு விதிமுறை. அதாவது, அதன் ஒருபகுதியை ஏனைய பகுதியோடு ஒப்பிட்டு விளக்க வேண்டும். ஆகவே, திருமறையில் (ஒன்றேயன்றி பல்வேறானதல்ல) ஒரு பகுதியின் தெளிவான உட்கருத்தைப்பற்றிக் கேள்வி எழும்போது, அதைவிட மிகத்தெளிவாய்ப்பேசுகிற மற்றப்பகுதிகளைக்கொண்டே அதன் கருத்தை முடிவு செய்யவேண்டும்.*

*2 பேதுரு 1:20-21; அப்போஸ். 15:15-16.*

**பாரா 10:** *சமயசம்பந்தமான எல்லா விவாதத்திற்குரிய காரியங்களும் திருமறையால் மட்டுமே தீர்க்கப்பட வேண்டும். அதேவிதமாக, சமய சீரமைப்புக்குழுக்களின் எல்லாக் கட்டளைகளும், பூர்வகால எழுத்துனர்களின் எண்ணங்களும், தனிப்பட்ட முறையில் அல்லது குழுவாக மனிதர்கள் கொண்டிருக்கும் தத்துவங்களும் பரிசுத்த ஆவியானவரால் எமக்கு அளிக்கப்பட்டுள்ள திருமறையின் தீர்ப்பின் அடிப்படையிலேயே, ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கப்படவோ வேண்டும். ஆவியானவரால் அளிக்கப்பட்டுள்ள திருமறையிலேயே எமது விசுவாசம் அமைதி காண்பதால் அதன் தீர்ப்பிலேயே நாம் திருப்தி அடைய வேண்டும். (உலகப்பிரகாரமான மனிதன் தன் சுய எண்ணங்களிலும், வாதங்களிலுமே நம்பிக்கை வைத்திருக்கிறான். ஆனால், விசுவாசியினுடைய விசுவாசம் திருமறையின் தீர்ப்பிலேயே இறுதி நம்பிக்கை வைத்திருக்கின்றது.)*

*மத்தேயு 22:29-32; எபேசி. 2:20; அப்போஸ்தலர் 28:23.*

**விளக்கவுரை:**

**எ. வேதத்தின் முடிவே இறுதியானது – பாரா 9 & 10**

1. **வேதம் தன்னைத்தானே விளக்குகிறது.**

2. **நமது விசுவாசம் குறித்த எல்லாப்பிரச்சனைகளையும் நியாயந்தீர்த்து இறுதிமுடிவெடுக்கும் அதிகாரத்தை வேதமே கொண்டுள்ளது.**

இதுவரை நாம் பாராக்கள் 6, 7, ஆகியவற்றில் பார்த்த சத்தியங்களின் தத்துவ ரீதியிலான முடிவையே இப்பாரா அறிவிக்கிறது. அதாவது, வேதம் போதுமானதாகவும், தெளிவானதாகவும் இருப்பதால் எல்லாக் காரியங்களிலும் அதன் முடிவே இறுதி முடிவானதாகும் என்பதே இப்பாரா போதிக்கும் உண்மையாகும்.

இப்பாராவில் இரண்டு முக்கியமான உண்மைகளைப் பார்க்கிறோம். முதலாவதாக, வேதம் தன்னைத்தானே விளக்குகிறது என்பதாகும். அதாவது வேதத்தின் சத்தியங்களை விளக்கும் அதிகாரத்தை வேதம் தனக்குள் கொண்டுள்ளது என்பது இதன் பொருள். இது ஒரு முக்கியமான வேதவிளக்கவிதியாகும் (Principles of Interpretation). வேதத்தைப் படிப்பவர்கள் அதன் சத்தியங்களை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சில வேதவிளக்கவிதிகளை அவர்கள் பயன்படுத்தி வேதத்தைப்படிக்க வேண்டும். இவ்விதிகளை வேதமே போதிக்கின்றது. ஆனால், இறுதியில் வேத சத்தியங்களைக்குறித்து வேதம் கொடுக்கும் முடிவே இறுதித்தீர்ப்பாகும். ஆகவே, வேத மாணவன் வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டுப்படித்து தான் விளங்கிக் கொண்டவைகள் சரியானவைதானா என்று எப்போதும் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் 15:15 இதனை உறுதிப்படுத்துகிறது. அங்கே, புஅதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியமும் ஒத்திருக்கின்றதுபூ என்று வாசிக்கிறோம். இப்பாராவின் போதனைகள் ரோமன் கத்தோலிக்கப் போதனைகளுக்கு எதிராக எழுதப்பட்டவை. ரோமன் கத்தோலிக்க மதம் தொடர்ந்து, தனக்கு மட்டுமே வேதத்திற்கு விளக்கம் கொடுக்கும் அதிகாரம் இருக்கிறது என்று பேசி வருகிறது. எந்த ஒரு சமயக்குழுவிற்கும்கூட அத்தகைய அதிகாரம் இல்லை. வேதம் மட்டுமே எக்காரியத்திற்கும் இறுதித்தீர்ப்பை அளிக்கக்கூடியது.

இப்பாரா இரண்டாவதாக போதிக்கும் உண்மை சமயக் குழுக்களுக்கிடையிலும், மனிதர்களுக்கிடையிலும் ஏற்படும் முரண்பாடுகளைக்குறித்தாகும். இப்பாரா அத்தகைய முரண்பாடுகளைத்தீர்த்து வைத்து இறுதித் தீர்ப்பளிக்கும் அதிகாரம் வேதத்திற்கு மட்டுமே உண்டு என்று போதிக்கின்றது.

இதனால், விசுவாச அறிக்கை, சமயக்குழுக்களின் தீர்ப்புகள், மனிதர்களின் உபதேசங்கள் ஆகியவைகள் தவறானவை, ஆபத்தானவை என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. இவை எல்லாவற்றையும் நாம் வேத அடிப்படையில் ஆராய்ந்து பார்த்து வேதபூர்வமானவற்றை பின்பற்றவேண்டும். வேத போதனை மட்டுமே எப்போதும் நம்மேல் அதிகாரம் செலுத்த வேண்டும்.

இதற்கு அப்போஸ்தலர் 15 அதிகாரம் நல்ல உதாரணம். அங்கே சபைகளுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சனைபற்றி சபைத்தலைவர்கள் கூடி ஆராய்ந்து சபை மக்களோடு பேசி முடிவெடுத்தபோதும், அம்முடிவு வேதபூர்வமான முடிவாக இருக்கும்படி அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். இப்பாராவின் போதனைக்கு ஆதாரமாகத் தரப்பட்டுள்ள வேதபகுதிகளை ஆராய்வது நல்ல பலன் தரும் (மத்தேயு 22:29, 31; எபேசி. 2:20; அப்போஸ். 28:33).

© சவரின் கிறேஸ் வெளியீடுகள் 1999. இவ்வாக்கத்தின் பகுதிகளையோ அல்லது இதனை முழுவதுமாகவோ அனுமதியின்றி எந்தவிதத்திலும் மறுபிரசுரம் செய்யக் கூடாது. (ஜெபத்தோடு பினவரும் வேதப்பகுதிகளை வாசிக்கவும். ரோமர் 13:1-7; 1 தீமோத். 5:18; யாத்தி. 20:25) முகவரி: த. பெ. எண் 62 159, சில்வியா பாரக், ஆகலாந்து, நியூசிலாந்து.

© *Sovereign Grace Publications 1999. Not to be copied or reproduced in whole or in part by any means without permission. (Prayerfully consider Romans 13:1-7; 1 Timothy 5:18 and Exodus 20:15) Write to : P O Box 62 159, Sylvia Park, Auckland 1006, NZ.*